
# பாலம்



மே 1998



70p

# GLOBAL TAMIL VISION

G.T.V

" திரையுலகின் புதிய வரவு "

" திரையுலகின் புதியதோர் உதயம்"

" திரையுலகின் புதியதோர் நிறுவனம்"




**Global Tamil Vision**
**95, Avenue Jean Jaures**
**93300 Auber Villiers**
**France.**
**Tel: (33) 148 33 20 88**

# PAALAM

Tamil Monthly Magazine

SE - nr. 20 20 05 45

மே 1998

# பாலம்

சமூக-அரசியல்-கலை-
இலக்கிய மாத சஞ்சிகை



*R. Pathmanaba Iyer*
*27-B High Street*
*Plaistow*
*London E13 0AD*
*Tel: 020 8472 8323*



தொடர்புகட்கு:

முகவரி:
Sønder Parken 10.st.tv
7430 Ikast
Denmark.
Fax: + 45 97 25 22 96



ஒரு ஆண்டுக்கான சந்தா

| | |
|---|---|
| பிரான்ஸ் | – 180 FFr |
| சுவிஸ் | – 48 Sfr |
| ஜேர்மனி | – 50 Dm |
| டென்மார்க் | – 200 Dkr |
| நோர்வே | – 200 Nkr |
| இங்கிலாந்து | – 20 £ |
| கனடா | – 45 C$ |
| அவுஸ்ரேலியா | – 45 A$ |

ஏனைய நாடுகள் –20 £

அச்சுப் பதிப்பு
**வாசன் அச்சகம்**
லண்டன்


## நீங்கள் நம்பிக்கை தருகின்றீர்கள்

பொதுவாகப் பாலம் என்றால் இணையமுடியாத இரு தரைப்பகுதிகளை இணைப்பதாகக் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் இடைவெளிகளில் தாமதிக்காது அவற்றைக் கடந்துபோக அமைச்சப்படுவதே பாலம் எந்பதைப் பலரும் பேசுவதில்லை. பாலம் எந்பது இடைவெளிகளைக் கடப்பதற்கே என்பதை இப்பொழுது நாமும் உணர்கிறோம்.

சஞ்சிகையென்றால் இப்படித்தான் இருத்தல் வேண்டும்; இவர்கள்தான் எழுத வேண்டும் என்ற மரபுகளும் அவைகளால் ஏற்பட்டுவிட்ட இடைவெளிகளும், தேக்கங்கங்களும் கடக்கப்பட வேண்டியவை. அதற்கு நவீன அறிவியலும் களைப்பில்லாத விடயங்களுமாக பாலம் சஞ்சிகை மலர வேண்டியதும் அவசியம். அதை உணர்ந்து உள்ளபடி முயற்சிக்கிறோம்.

ஓர் சஞ்சிகையானது இலக்கை எட்டாதபோது அதன் பக்கங்கள் வாசகர்களுக்கு அதிகம் போலத் தோன்றுவதும்; மறாக அதன் பக்கங்களில் தரம் இருந்தால் மேலும் பக்கங்கள் இல்லையா என்று தேடுவதும் இருவகை உணர்வுகள். இந்த வகையில் பாலத்தின் பக்கங்களை அதிகரிக்க வேண்டுமென பலரும் கேட்பதும்; சிறுசிறு நகரங்களில்கூட பெருமளவு சந்தாதாரர் சேர்ந்துவருவதும் எமக்கு நம்பிக்கை தருகிறது. பாலம் உங்கள் கைகளில் கிடைப்பதற்கு காலதாமதமாகிவருவதை ஒப்புக்கொள்கிறோம். எனினும் அதைத் தவிர்ப்பதற்கே தொடர்ந்தும் முயற்சிக்கிறோம். விரைவில் அந்தக் கால இடைவெளி நீக்கப்படும். தாமதமாக வந்தாலும்கூட எக் காலத்திற்கும் வாசிக்கப் பொருத்தமான வகையிலேயே ஆக்கங்கள் அமைக்கப்படுகின்றன.

பாலம் தடைகளைத் தாண்டும்.

**சான்றோரைப் போற்றுவதும்**
**கற்றோரை கௌரவிப்பதும்**
**தமிழர்களாகிய எமது மரபு;**
**எமது சீரிய பண்பாடு**

**தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வே. பிரபாகரன்**





# உள்ளே...




பக்கம்—04
ஜெயசிக்குறு ஓர் ஆண்டு






பக்கம்—07
எரியும் நெருப்பில் இன்னொரு நாடு





பக்கம்—10
அம்ஸ்ரடாம் உடன் படிக்கை





பக்கம்—12
புலம்பெயர்ந்தோரின் தூதுவன்






பக்கம்—22
இந்தியா பாகிஸ்தான்
அணுக்குண்டுப் பரிசோதனை





பக்கம்—26
டிஜிற்றல் தொழில்நுட்பத்தின்
புதிய சாதனை



பக்கம்—42
திரைப்படம் நாடக மேடையில்





பக்கம்—46
காதலுக்கு மரியாதையும்
சொர்ணமுகியும்

# ஜெயசிக்குறு = தோல்விநிச்சயம்!!

## கட்டாய இராணுவம் காலைச் சுற்றும் பாம்பு!



இந்த வருடம் மேமாதம் ஒரு வரலாற்றைப் பதிவு செய்துள்ளது. ஜெயசிக்குறுவின் ஒரு வருடத்தை வரலாறு தன் பக்கங்களில் பதிவு செய்துகொண்டது இந்த மாதத்தில் தான். கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில், ஒரு பாரிய இன அழிப்புப்போரை எதிர்கொண்டபடி விழிபிதுங்கி நின்ற தமிழ் மக்கள் இந்த வருடம் ஒரு வீரவரலாற்றைப் படைத்து விட்ட பூரிப்பில் விழாக்கள் கொண்டாடினர். ஒரு பெரும் படையணியை, மரபுப்படையணிக்குரிய சாதகங்கள் ஏதும் இன்றி, படைபலத்திலும் படைக்கலச்சக்தியிலும் எந்த விதத்திலும் சமனாகாத விடுதலைப்புலிகள், மனோபலம் என்ற உரிய பலத்தின் அடிப்படையில் ஒரு வருடத்திற்கு மேலாகப் போரிட்டு, அதன் ஆக்கிரமிப்பு ஆசைக்கு ஆப்பு வைத்திருக்கின்றனர் என்பது எத்துணை பெருமைக்குரிய விடையமாக தமிழ்மக்களால் கொண்டாடப்படுகின்றது.

97-ம் ஆண்டு மே மாதம் 13-ம் திகதி, இந்த ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கை, ஆரம்பிக்கப்பட்டபோது, சில மாதங்களில் இது முழுமையாகப் பூர்த்தியாகி விடும் என்பது சிங்கள அரசின் இனியகனவாக இருந்தது. இந்த குருட்டுத்தனமான கணக்கிற்கு காரணம் இல்லாமல் இல்லை. சூரியக்கதிர்களும், எடிபலவும் கொடுத்த தென்பு இதற்கு முக்கிய காரணமாக அமைந்துவிட்டது என்பது பிழையான கருத்தாய் அமையாது.

இந்த ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை நான்கு மாதத்தில் முற்றாக முடிவடைந்து, குடாநாட்டு இராணுவத்தினருக்கான தரைவழி விநியோகத்தை நான்கு மாதத்தில் ஆரம்பிக்கலாம் என சிறீலங்கா அரசு திட்டமிட்டது. அதற்கொப்ப, சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்தவத்தை, 97-ம் ஆண்டு செப்டம்பருக்குள் தரைப்பாதை அமைக்கப்படும் என, ஜெயசிக்குறுவிற்கு முதலாவது காலக்கெடுவை வழங்கினார்.

**போதை தலைக்கேறிய, குடிபோதைப் பேர்வழி மீண்டும்மீண்டும் கெட்டவார்த்தைகளைப் பிசத்துவதுபோல், மீண்டும் மீண்டும் ரத்வத்தை உயிர்ப்புற்றார். ஜெயசிக்குறு விரைவில் முடிக்கப்படும் என்று புதியபுதிய காலக்கெடுக்களை விதித்தார்.**

ஆனால் எதிர்பார்ப்பதுபோல், இராணுவ நடவடிக்கை இம்முறை இலகுவானதாக இருக்கவில்லை. இதற்கெனவே காத்திருந்தவர்கள் போல விடுதலைப்புலிகள் பாரிய தாக்குதல்களை நடத்தினர். 97–ம் ஆண்டு ஜூன் மாதம் தாண்டிக் குளத்திலும் ஓமந்தையிலுமாக இரு வார இடைவெளியில், ஜெயசிக் குறுவின் வாலிலும் தலையிலும் பாரிய இரு தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்தினர். ஜூலையில் நெடுங்கேணியில் தாக்குதல் நடத்தினர். செப்டம்பர் மாதமும் மூதூரில் பாரிய தாக்கு தல் நடத்தப்பட்டது. இந்த வலுத்த அடிகளால், ஜெயசிக்குறு நோய் வாய்ப்பட்டு எழும்பமுடியாமல் தவித்தது. சிங்களப்படைக்கு என்று மில்லாதவாறு பெரும் இழப்பை இந்த நான்கு மாதத்தில் விடுத லைப் புலிகள் ஏற்படுத்தினர். இந்தப் பாரிய தாக்குதல்களில் மரபுப்படையணிக்குரிய ஆயுதங் களை விடுதலைப் புலிகள் பெரும ளவில் பெற்றனர்.

ஆக அமைச்சர் ரத்வத்தையின் செப்டம்பர் காலக்கெடு அவலத் துடன் கடந்து சென்றது. பின்னர் அவர் நவம்பர் 97–க்குள் ஜெய சிக்குறு முடித்துவைக்கப்படும் என்று அறிவித்தார்.

விடுதலைப் புலிகள் விடுவதாய் இல்லை. கறுப்புக் குத்தியிலும் விஞ்ஞானன் குளத்திலும் பெரும் தாக்குதலை ஒக்டோபரில் நடத்தி னர். பெரும் இழப்பை சிங்களப்ப டைக்கு வழங்கினர். ரத்வத்தை யின் காலக்கெடு ஆட்டம் கண் டது. பருவமழை என்று காரணம் சொல்லி ரத்வத்தை தப்பிக்கப் பார்த்தார். ஆனால் பருவமழை பெய்தபோதும், சீரற்ற காலநிலை இருந்தபோதும் விடுதலைப் புலி கள் விடுவதாய் இல்லை. டிசம்பர் மாதம் மன்னன் குளத்தில் சிங்க ளப்படைமீது மற்றுமொரு தாக்கு தலை விடுதலைப் புலிகள் நடத் தினர். பெரும் இழப்பை ஏற்படுத் தினர்.

ஆனால் அமைச்சர் ரத்வத்தை யும் விடுவதாய் இல்லை. மீண்டும் அறிவித்தார் பெப்ரவரி என்று. இந்தக் காலம் முக்கியமானது. அவர்களின் பிரதான கனவுக் காலம் இதுவாகவே இருந்தது. அதாவது, சிறீலங்காவின் ஐம்பதா வது சுதந்திரதின பொன்விழாக் கொண்டாட்டத்தை கண்டியில் கொண்டாடுவதெனவும், குடா நாட்டுக்கான தரைப்பாதையைத் திறந்து, யாழ்ப்பாணத்தில் இருந்து

தற்போது, ஜெயசிக்குறு ஒருவருடத்தைப் பூர்த்தி செய்து, பெரும் அழிவையும் அவலத்தையும் ஏற்படுத்திவிட்டு ஒன்றும் அறியாத அப்பிராணிபோல பேசாமல் வன்னிக் காட்டில், தவறிளைத்துவிட்ட சிறுவன் போல முழிபிதுங்கி நிற்கிறது.

## மாதபலன் மே-1998



சாத்திரியார்

வெற்றிரதம் புறப்பட்டு, கைப்பற் றப்பட்ட பாதைவழியே சென்று, கண்டியில் வெற்றிவிழாக் கொண் டாடுவது என்பதும் திட்டம்.

இந்த பேராசைமீது மண்ணள் ளிப் போட்டது விதமாய், மீண்டும் ஒரு பாரிய தாக்குதலை, ஜெய சிக்குறுவுடன் கைகோர்க்க நின்ற மறுமுனையில் விடுதலைப்புலிகள் நடத்தினர். கிளிநொச்சி பரந்தன் தளம்மீது பெப்ரவரி முதலாம் திகதி பாரிய தாக்குதலை நடத்திய விடுதலைப் புலிகள் கிளிநொச்சி யின் பெரும்பகுதியைக் கைப்பற்றி னர். ஆயுதங்களைக் கைப்பற் றினர். இராணுவத்தினரைக் கொன்று காயப்படுத்தினர்.

சிங்களம் நொந்துபோய்விட் டது. பொன்விழாக் கொண்டாட் டத்தை கண்டியில் நடத்தக்கூட முடியாமல், தலைநகரில், துப் பாக்கி வேலிக்குள் நின்று கொண் டாடவேண்டிய இக்கட்டில் முழி பிதுங்கியது சிங்களம்.

போதை தலைக்கேறிய, குடி போதைப் பேர்வழி மீண்டும் மீண்டும் கெட்டவார்த்தைகளைப் பிசத்துவதுபோல், மீண்டும் மீண்டும் ரத்வத்தை உயிர்ப்புற்றார். ஜெயசிக்குறு விரைவில் முடிக்கப் படும் என்று புதியபுதிய காலக் கெடுக்களை விதித்தார். தமிழ் சிங்கள புதுவருட தினமான ஏப்ரல் 14–க்குமுன் ஜெயசிக்குறு முடித்துவைக்கப்படும் என்று அறி வித்தார். ஆனால் அதுவும் முடி யாமல் போனது. அப்படி இப்படி யாக அது ஒரு வருடத்தை எட்டிப் பிடிப்பதற்கிடையில், அதனை வெற்றிபெறச் செய்யவேண்டாம் என்ற நினைப்பில் ஏப்ரல் 20–ம் திகதி மேற்கொள்ளப்பட்ட ஆக்கிர மிப்பு முயற்சியும் விடுதலைப்புலிக ளால் முற்றாக முறியடிக்கப்பட் டது. டாங்கிகளை விட்டுவிட்டு ஓடவேண்டிய நிலையிலேயே சிங் களப் படை இருந்தது.

தற்போது, ஜெயசிக்குறு ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்து, பெரும் அழிவையும் அவலத்தை யும் ஏற்படுத்திவிட்டு ஒன்றும் அறியாத அப்பிராணிபோல பேசா

மல் வன்னிக் காட்டில், தவறிளைத் துவிட்ட சிறுவன் போல முழி பிதுங்கி நிற்கிறது.

மூன்று பற்றாலியன் படையுடன் ஆரம்பிக்கப்பட்டதாக, சிறீ லங்கா அரசால் சொல்லப்பட்ட இந்த ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை, ஒரு பற்றாலியன் படையினரை இழந்து கைகொடுப்பார் இன்றி நிற்கிறது.

தலைமறைவான இராணுவத்தினருக்கு தேன்தடவிய பண்டங்களை விரித்து முன்றுமுறை வலைவிரித்தாகிவிட்டது. வந்து அகப்படுவார் குறைவு.

பெப்ரவரி மாதம் சுதந்திரதினக் கொண்டாட்டங்களை அடுத்து, சந்திரிகா அம்மையார் தலைமறைவான படையினருக்கு பொது மன்னிப்பு வழங்குவதாக அறிவித்தார். நாட்டைக் காக்கும் அரிய சந்தர்ப்பத்தை இப் பொதுமன்னிப்பு உங்களுக்கு அளிப்பதாக அவர் திருவாய் மலர்ந்தருளினார். ஆனால் கேட்பதற்கு ஆட்தான் இல்லை. மீண்டும் மே மாதம் முதல்வாரம், பொதுமன்னிப்பு அறிவிக்கப்பட்டது. இம்முறையும் அது வேலைசெய்யவில்லை. மே மாதம் இறுதியிலும் 16–மணிநேர பொதுமன்னிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வளவு அவசரப்பட்டு பதினாறு மணித்தியாலத்தில் இராணுவத்தில் வந்து இணையும் அவாவை ஓடியவர்கள் கொண்டிருக்கப்போவதில்லை.

இனியென்ன ரத்வத்தை சொல்வதுபோல், கட்டாய இராணுவச் சேவையை அரசாங்கம் அறிவிக்கக்கூடும். பாடசாலைகளில் மாணவர்களை இராணுவத்தில் சேரும் பிரச்சாரத்தை அரசாங்கம் மேற்கொள்வதாக ரணில்விக்கிரமசிங்கா கூறிவருதை மறுக்கும் சிறீ லங்கா அரசாங்கம், இனி அதனை வெளியரங்கமாக ஒத்துக்கொண்டு, மாணவர்களை பிடித்துப் படைப் பெருக்கும் நடவடிக்கையை பகிரங்கமாகவே மேற்கொள்ளக் கூடும்.

ஆனால் இந்தப் பகிரங்கப் பிரயத்தனங்கள், பலாத்கார முயற்சிகள் ஒரு யுத்தத்தின் வெற்றியைத் தீர்மானிக்குமா. சிங்கள இனவெறி அரசாங்கம் ஒரு பெரும் தோல்வியின் வாசலில் நிற்கின்றது என்பது, அதன் செயற்பாடுகளில் இருந்து வெளிப்படையாகவே தெரிகின்றது.

தலைமறைவான இராணுவத்தினர், கைதுசெய்யப்பட்டு சண்டைக்கு அனுப்பப்படுவோம் என அஞ்சி தமது கால்களைத் துண்டிக்கும் சம்பவங்களும், தம்மைத் தாமே சுட்டு தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்களும், விடுதலைப் புலிகளிடம் சரணடையும் சம்பவங்களும் நிலமையின் தீவிரத்தை உணர்த்தப்போதுமானது. இராணுவத்தினர் பலாத்காரமாக சண்டை செய்ய அனுப்பப்படுகின்றனர். பௌத்த சிங்களப் பேரினவாத அரசியல் தலைமைகளை வாழ வைப்பதற்காக, பொருளாதார தரப்பின் பலம் இல்லாத கிராமத்து சிங்கள இளைஞர்கள், சண்டைக்களம் நோக்கி பலிக்கடாக்களாய் அனுப்பப்படுகின்றனர் என்பது முழுமையாகப் புலப்பட்டு நிற்கின்றது. இந்த மனக் கொந்தளிப்பு கையாலாகாதான மனவேகரம், சந்திரிகாமீதும் ரத்வத்தை மீதும் இராணுவத் தளபதிகள் மீதும் தீயாய் நீளும், அதன்போது எதுவும் நடக்கலாம், புலிகள் செய்யாமலே அங்கிருந்து இனிய மாற்றங்கள் வரக்கூடும்.

★★

## நாட்டின் தலைவர்களின் ஓவியங்களைத் தாங்கிய விமானம்

ஆஸ்திரிய நாட்டின் 1000-வது பிறந்த நாளை கொண்டாடு முகமாக இந்த விமானம் வெளியாகியுள்ளது. ஆஸ்திரிய எயார்லைன்ஸ் அறிமுகமாக்கியிருக்கும் எயார்பஸ் A321 என்னும் மேற் கண்ட விமானத்தில் ஆஸ்திரியாவிற்கு பெருமை தேடித்தந்த



அந்நாட்டின் முக்கியமானவர்களின் உருவங்கள் வரையப்பட்டுள்ளது. ஆஸ்திரியரான பிரபல இசைக் கலைஞர் மூசாட், பிரபல திரைப்பட நடிகர் ஆணாஸ் ஸ்வாஸ்னேக்கர் போன்றோரும் இதில் இடம் பெற்றுள்ளனர். ஒவ்வொரு நாடும் தமக்கு பெருமை தேடித் தந்தவர்களை எப்படி மதிக்கிறது என்பதற்கு இது ஓர் உதாரணமாகும்.

# எரியும் நெருப்பில் இன்னொரு நாடு!

# இந்தோனேசியா





இந்தோனேசியாவில் அரசியல் காட்சிகள் ஒவ்வொரு மணிநேரமும் புதிதுபுதிதாக மாறிக் கொண்டிருக்கின்றன. முன்னர் கொழும்பில் நடைபெற்ற ஜூலைக் கலவரங்கள் போன்று புகை மூடிய தெருக்கள், இரத்த வெள்ளத்தில் மூழ்கித் துடிக்கும் மக்கள் சந்தர்ப்பம் பார்த்து கடைகளை உடைத்துக் கொள்ளையிடும் திருடர்கள், அடித்து விரட்டப்படும் சிறுபான்மைச் சீனர்கள், உணர்ச்சியால் வெடித்து திரளும் மாணவர் ஊர்வலங்களென தொலைக்காட்சிகளின் சின்னத்திரைகள் முதல் பத்திரிகைகளின் முகப்புச் செய்திகள் வரை எரியும் இந்தோனேசியாவின் புகைக்கண்டத்திலேயே மூழ்கிக் கிடக்கின்றன. இந்தோனேசியாவில் தமிழர்களும் வாழ்ந்து கொண்டிருப்பதால் அங்கு நடைபெறும் நிகழ்வுகளைக் கூர்ந்து கவனிக்க வேண்டியது நமக்கும் கடமையாகிறது.

இந்தோனேசியா தனியான நிலப்பரப்பைக் கொண்ட நாடல்ல. 14,000 தீவுகளைக் கொண்டு பசுபிக் சமுத்திரத்தில் பரவிக்கிடக்கும் தீவுக்கூட்ட நாடு. மலைச் சிகரங்களும் குமுறிவெடிக்கும் எரிமலைத் தொடர்களும் இந்த நாட்டின் உள்ளும் வெளியும் சுற்றிக் கிடக்கின்றன. இங்குள்ள எரிமலைகளில் எது எப்போது வெடிக்குமென எதிர்பார்ப்பதே இதுவரை உலகின் வழக்கமாக இருந்து வந்தது. இப்போது உலகம் எதிர்பாராத விதமாக அங்குள்ள மக்கள் எரிமலையாகப் பொங்கி ஓயவில்லை. சர்வாதிகாரம், ஊழல், குறைநிலை ஜனநாயகம் இவைகளுக்கெதிராக மாணவர்கள் வீதியில் இறங்கியிருக்கிறார்கள்.

தலைநகரான ஜகர்த்தாவிலிருந்து சுமார் இருபது மைல் தூரம் பிரயாணம் செய்தால் தமிழர்களால் அமைக்கப்பட்ட பிரமாண்டமான இந்து ஆலயம் வரும். இது இந்தியாவின் மாமல்லபுரத்திலிருந்து வரவழைக்கப்பட்ட கருங்கற் சிலைகளோடு நிமிர்ந்து நிற்கக் காண்கிறோம். இது தவிர சுமாத்திரா, ஜாவா, பாலி போன்ற தீவுகளிலும் பெருந்தொகையான தமிழர்கள் வாழ்ந்துவருகிறார்கள். இந்தோனேசியாவை இந்திய வம்சாவளி மன்னர்களும் ஆட்சி செய்துள்ளனர். அக்காலங்களில் வாணிபம் செய்யச் சென்ற தமிழர்கள் அங்கு நிரந்தரமாகவே தங்கி, நாளடைவில் அந்நாட்டின் பூர்வீகக் குடிகளாயினர். இவர்கள்

## இந்தோனேசியாவிலும் தமிழர்கள்!

தமிழை மறந்துவிட்டாலும் பொங்கல், மாட்டுவண்டிச் சவாரி, இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தோனேசியாவின் நிழலாட்டக் கலையென யாவிலுமே தங்கள் கலாச்சாரத்தை மறவாது கலந்துள்ளனர். மதுரா மேடக் (மைதானம்) போன்ற தமிழ் நகரங்கள்கூட இங்கு உண்டு. மாணவர் போராட்டத்தின் தலைமையில் அங்கங்கு சில தமிழ் முகங்களையும் காணமுடிகிறது.

இப்போது 200 மில்லியன் மக்களைக் கொண்ட இந் நாட்டில் 170 மில்லியன் முஸ்லீம்கள். மிகுதி இந்துக்கள், பௌத்தர், கிறிஸ்தவர்களுமாக உண்டு. பகாஷா இந்தோனேசியாவும், ஆங்கிலமும் இங்கு பேசப்படும் இரு பிரதான மொழிகள். 1945–ம் ஆண்டு இந்நாடு சுதந்திரம் பெற்றது. சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு ஆட்சித் தலைவரானவர் அதிபர் சுகாட்டோ. இவர் கடந்த 32 வருடங்கள் தொடர்ச்சியாக இந் நாட்டின் அதிபராக இருந்து வந்திருக்கிறார். கியூபா அதிபர் பிடல் காஸ்ரோவிற்கு அடுத்ததாக இவரே உலகில் ஒரு நாட்டை நீண்ட காலம் ஆட்சி செய்த தலைவராகும். இவரது நீண்ட ஆட்சியில் மெல்ல மெல்ல வளர்ந்து மலை



போலாகிவிட்ட ஊழல், அதிகார துஷ்பிரயோகம் போன்றன நாளும் பொழுதுமாக மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்திவர; அதே வேளை ஆட்சிக் கட்டிலில் நீண்டகாலமாக வீற்றிருந்த மமதை கண்களை மறைத்ததால் சுகாட்டோவும் அலட்சியமாய் ஆட்சி பரிபாலனம் நடத்த; இப்படியே எதிரெதிரான விசைகள் இரண்டும் வளர்ந்துவந்து இப்போது தான் எதிரும் புதிருமாகச் சந்திக்கின்றன. அந்த மோதலின் நெருப்பே இன்று அதிபர் சுகாட்டோவைப் பதவி இறக்கியிருக்கிறது. ஆசியான் அமைப்பை ஆரம்பித்தவரானாலும் சுகாட்டோவின் வீழ்ச்சி மக்கள் சக்திக்குக் கிடைத்த மகத்தான வெற்றியென்று தெரிவிக்கப்படுகிறது. சிங்கப்பூரின் முன்னாள் அதிபர் இதுபற்றிக் கூறும் போது "உலகம் இந்தோனேசியாவில் இருந்து புதியதோர் அரசியல் அத்தியாயத்தை படிக்கத் தொடங்கியிருக்கிறது" என்று குறிப்பிட்டார். அவரின் கணிப்பு சரியானதே. கப்பல் மூழ்கப்போனதை எப்படியோ எலிகள் முன் கூட்டியே அறிந்து அதைவிட்டு இறங்கிவிடும் என்பது பழமொழி. இந்த எலிகள் போன்றவர்களே பொருளாதாரத்தின் முதுகெலும்பான பங்குச் சந்தைக்காரர். இந்தோனேசியாவில் மக்கள் புரட்சியொன்று வெடிக்கப் போவதை அனுமானித்த பங்குச் சந்தைக்காரர் படிப்படியாக தமது பணத்தை டாலர்களாக மாற்றி நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார்கள். இந்தோனேசிய நாணயமான ருப்பியாவின் பெறுமதி ஒரு டொலருக்கு 2150–ருப்பியா–வாக வீழ்ச்சியடைந்தது. பொருட்களின் விலை வேகமாக உயர பணவீக்கம் நாட்டின் பொருளாதாரத்தை வேரோடு முறித்து வீழ்த்தியது. இந்நிலையில் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியமைக்க 1998–மார்ச் மாதம் மீண்டும் அதிபராகத் தெரிவு செய்யப்பட்டார் சுகாட்டோ. ஆனாலும் 32 வருட சர்வாதிகார ஆட்சியில் அவர் உருவாக்கிக் கொண்ட அதிருப்தியை அவரால் வெற்றிகொள்ள முடியாமல் போய்விட்டது.

சுகாட்டோ பதவி விலகவேண்டுமென்ற கோஷம் வலுவடைய உலக நாடுகளின் அழுத்தத்திற்கும் அடிபணிய வேண்டிய நிலையில் இப்போது பதவி விலகியிருக்கிறார். அவர் விலகும் போதே உதவி அதிபர் ஹபீப்பை அதிபராக நியமித்திருக்கிறார். இனி 2003 வரை ஹபீப்பே ஆட்சியதிபராக இருப்பார். இவர் நாட்டிற்கு ஏற்ற சீர்திருத்தங்களைப் படிப்படியாகச் செய்யப்போவதாக வாக்களித்துள்ளார். ஆனால் இவர் அறிவித்துள்ள மந்திரிசபையில் இடம்பெற்றுள்ள அனைவரும் பழைய ஊழல் பேர்வழிகளே. இராணுவ அதிகார பீடத்திலும் மாற்றம் ஏற்படவில்லை. அதிபர் பதவிக்கு ஒரேயொரு வேட்பாளரே போட்டியிட்டு அதிபராகும் இந்த நாட்டில் உண்மையான ஜனநாயகத்தை அமுல்படுத்தக் கோரி மாணவர்கள் மறுபடியும் போராட்டத்தில் குதித்துள்ளனர். இனிமேல்தான் நாட்டின் சொத்தில் பெரும்பகுதியை தமது உடமையாக வைத்தி



ருக்கும் சுகாட்டோவின் குடும்பத்தின் எதிர்காலம் தீர்மானிக்கப் படப் போகிறது. சர்வதேச நாணயநிதி, உலக வங்கி உட்பட உலகின் அதிகாரக் கட்டிலில் இருப்போரெல்லாம் முண்டு கொடுத்தும் சுகாட்டோவின் ஆட்சிக்கட்டிலைப் பாதுகாக்க முடியாதுபோய்விட்டது. திரண்டெழும் மக்கள் சக்தி ஆட்சிக் கட்டில்களுக்கு ஆபத்தாக வரும்போது அதைத்தடுக்க வல்லரசுகள்கூட முடியாது வலுவிழந்து போயிருப்பதே இப்போதுள்ள புதிய அரசியல் அலையாக உள்ளது. பிரித்தானிய முடி பாராளுமன்றத்திடம் மெல்ல மெல்ல தன் அதிகாரத்தை இழந்து வெற்றுச் சம்பிரதாயமாக வீற்றிருப்பதைப் போல ஆட்சி மாற்றத்தைத் தீர்மானிக்கும் வல்லமையை பிரித்தானிய முடிபோல வல்லரசுகளும் இழக்கத் தொடங்கிவிட்டனவா? என்ற கேள்வியும் அதற்குரிய பதிலுமே இந்தோனேசியாவில் படிக்கக்கூடிய பாடமாக உள்ளது. சிங்கப்பூரின் முன்னாள் அதிபரும் இதையே சுட்டிக் காட்டியதாகக் கொள்ளலாம். இந்தோனேசியாவின் பாடம் தென்கிழக்காசியாவிற்கு மட்டுமல்ல உலகிற்கே பொருந்தி வந்தாலும் ஆச்சரியப்பட எதுவுமில்லை. ★★

பூலோகன்


எம் உறவுகளின் துயர் துடைக்க
எழுந்திடுவீர்
தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன்
இணைந்திடுவீர்.
துயர் துடைப்போம்
ஜூன்–ஜூலை மாதங்களில் உங்களை நாடிவரும்
தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்களிடம்
உங்களால் முடிந்த உதவியை வழங்குங்கள்.

# அம்ஸ்ரடாம் உடன்படிக்கை

## வெளிநாட்டவர்களுக்கு பாதுகாப்புத் தருமா?

ஐரோப்பிய ஒன்றியத்தின் மூன்றாவதும் மிக முக்கிய மானதுமான அம்ஸ்ரடாம் உடன் படிக்கையை பெரும்பாலான நாடு கள் சர்வஜன வாக்கெடுப்பின் றியே ஏற்றுக்கொண்டுவிட்டன. ஆனால் இந்த உடன்படிக்கை சாதாரணமானதல்ல; ஒன்றிற்கு பல தடவைகள் சிந்திக்கப்பட வேண்டிய காரியம் என்பதால் மே 28–ல் இதை ஏற்பதா? விடுவதா? என்பதற்கான சர்வஜன வாக் கெடுப்பு டென்மார்க்கில் நடை பெற்றது. அம்ஸ்ரடாம் உடன் படிக்கையென்றால் என்ன? அது எமக்குச் சாதகமானதா? அல்லது பாதகமானதா? என்பதைப்பற்றி புலம்பெயர்ந்த மக்களிடையே; சிறப்பாகத் தமிழ் மக்களிடையே அதிர்வலைகள் எதையும் பெரி தாக அவதானிக்க முடியவில்லை. ஆனால் அம்ஸ்ரடாம் உடன்ப டிக்கை பற்றி நாம் கட்டாய மாகவும், கண்டிப்பாகவும் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

அம்ஸ்ரடாம் உடன்படிக்கை யின் பின் ஐரோப்பிய ஒன்றியம் உலகின் முதலாவது பொருளா தார வல்லரசாகத் தன்னை அடையாளம் காட்டிக் கொள்ள முடியும். மேலும் ஐந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகள் புதிதாக ஒன்றியத்தில் இணைந்து கொள் கின்றன. சோவியத் ஒன்றியம் மறைந்துபோக அந்த இடத்திற்கு

> அம்ஸ்ரடாம் உடன்படிக்கையின் பின் ஐரோப்பிய ஒன்றியம் உலகின் முதலாவது பொருளாதார வல்லரசாகத் தன்னை அடையாளம் காட்டிக் கொள்ள முடியும்.

பலமான ஐரோப்பிய ஒன்றியம் பல புதிய நட்சத்திரங்களுடன் விரைவாக முன்வருகின்றது. என வேதான் இது முழு உலகத்தை யுமே பாதிப்பிற்குள்ளாக்கும் மிக முக்கியமான காரியமாக இருக்கி றது. மேலும் ஒவ்வொரு ஐரோப் பியக் குடிமகனதும் வாழ்விலும் பாரதூரமான மாற்றங்கள் ஏற்ப டுத்தப்படும்போது இந்த உடன் படிக்கை ஐரோப்பாவில் வாழும் தமிழ்மக்களுக்கு சாதகமானதா? அல்லது பாதகமானதா? என்ப தையாவது நாம் உன்னிப்பாக அறிந்து வைத்திருப்பது அவசியம்.



ஐரோப்பிய ஒன்றியத்தின் 1967–ம் ஆண்டின் ரோம் உடன்படிக்கை. 1993–ம் ஆண்டின் மாஸ்றிச் உடன்படிக்கை ஆகியவற்றிலிருந்து வேறுபட்டு மூன்றாவது பாய்ச்சலாக வருகிறது அம்ஸ்ரடாம் உடன்படிக்கை. இதில் நமக்கு முக்கியமானது அகதிகள் தொடர்பான புதிய கொள்கைகளாகும். இதன்படி இனி ஐரோப்பிய ஒன்றியத்திலிருக்கும் நாடுகள் அனைத்துமே ஒரே விதமான அகதிகள் கொள்கையையே கடைப்பிடித்தல் வேண்டும். ஏற்கனவே 1990–ல் இருந்தே படிப்படியாக அகதிகளுக்கெதிரான நடவடிக்கைகளை ஐரோப்பிய நாடுகள் இறுக்கி வருகின்றன. இருந்தும் சில நாடுகளில் 60 வயதுக்கு மேற்பட்ட பெற்றோரை ஐரோப்பா வரவழைக்க முடியும். ஆனால் அம்ஸ்ரடாம் உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டால் அந்தச் சலுகை இனி நீடிக்காது. இது ஓர் சிறிய உதாரணமாகும்.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வெளியில் திருமணம் செய்வோர் மனைவியை அல்லது கணவனையோ வரவழைப்பதானால் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சட்டங்களும் ஐரோப்பா முழுவதிற்குமே பொதுவானதாக வரவுள்ளது. மேலும் அகதிகளை பொதுவான ஓர் முகாமில் வைத்துப் பராமரித்து, அவர்களின் விசாரணைகள் முடிவடைய ஐரோப்பிய நாடுகளுக்கு பகிர்ந்து வழங்கவும் இதில் திட்டம் உள்ளது. இப்போது ஐ.நாவின் அகதி முகாம் துருக்கியில் இயங்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இது மேலும் விரிவாக்கப்படலாம். மேலும் தற்போது அகதிகளின் விபரங்களை ஒருவருக்கொருவர் பரிமாறுவதில் ஸ்கன்டினேவியன் நாடுகளிடையே உடன்பாடு உள்ளதைப் போல இனி ஐரோப்பிய ஒன்றியம் முழுவதுமே அகதி அந்தஸ்து கோரும் ஒருவர் பற்றிய தகவல்கள் கணணிகளின் மூலம் பரிமாற்றப்படும். எனவே அகதிகளாக அடைக்கலம் கோருவோர் இங்குள்ள சட்டங்களை அறிந்து அதன்பின்பே அடைக்கலம் கோர வேண்டிய நிலையுள்ளது.

மேலும் ஐந்து நாடுகள் புதிதாக உறுப்புரிமை பெறுவதானால் அவையனைத்தும் ஐரோப்பிய ஒன்றியச் சட்டத்திற்குட்பட்ட சூழல் பாதுகாப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். எனவே கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள பல சூழலைப் பாதிக்கும் கருவிகளும் உபகரணங்களும் மலிவு விலையில் விற்பனையாக்கப்பட வேண்டிவரும். இப்பொருட்கள் ஒன்றியத்திற்குள் வராத நாடுகளில் மலிவு விலையில் இறக்கப்படும் ஆபத்துமுண்டு. மேலும் தற்போது உள்ள ஐரோப்பிய பாராளுமன்றத்தின் வாக்களிக்கும் அங்கத்துவத்தின் எண்ணிக்கை 626. ஆனால் புதிய நாடுகள் சேர்ந்தாலும் வாக்குரிமையில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தி விடமுடியாது. வாக்களிப்பு எண்ணிக்கை 700–க்கு மேல் அதிகரிக்கப்படமாட்டாது என்றும் கூறப்படுகிறது. இத்தோடு

★ பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல், உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்துதல்.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பொது நாணயத்தை அமுல்படுத்துதல் (இதில் சேராத நாடுகளும் உண்டு).

★நாடுகளின் எல்லைகள் திறந்துவிடல். ஆனாலும் பொலிசாரின் இடத்தில் இனி கணணிகளும் கமெராக்களும் இருக்கும். பொலிசார் தனியாக கட்டிடத்திலிருந்து அனைத்தையும் கவனிப்பார்கள். இதனால் எல்லை கடத்தல், வன்முறை, ஆட்கடத்தல் போன்ற குற்றச் செயல்கள் மேலும் இலகுவாகத் தடுக்கப்படும்.

★ஒருவரை ஐரோப்பிய ஒன்றியத்தின் எந்த நாட்டிற்குள்ளும் உடனடியாகக் கைதுசெய்ய 'ஈரோபோல்' பொலிசாரால் முடியும்.

★அங்கத்துவ நாடுகளிடையேயான ஆரோக்கியமற்ற வர்த்தகப் போட்டிகள் தவிர்க்கப்பட்டு அங்கத்துவ நாடுகளிடையே சமமான வாழ்க்கைத்தர நிலை என்றும் அறிமுகமாகும்.

மேற்கண்ட மாற்றங்களே இவ் உடன்படிக்கை மூலம் வருகின்றன. இதை நடைமுறைப்படுத்தும் போது மேலும் பல சிக்கல்கள் வரலாம். அனைத்தையும் தீர்க்கும் சர்வ வல்லமை படைத்த நிலையமாக 'புறுஸ்சல்ஸ்' மாற்றமடைகிறது. மேலும் எந்தவொரு சர்வதேசப் பிரச்சினைக்கும் நாம் கருத்துக்கூறல் முடியாது ஐரோப்பியப் பாராளுமன்றமே யாவற்றிற்கும் பொறுப்பென அங்கத்துவ நாடுகள் சறுகிக் கொள்ளவும் வாய்ப்புகள் உண்டு. எவ்வாறாயினும் புலம்பெயர் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அம்ஸ்ரடாம் உடன்படிக்கை அவர்கள் அடையாளத்திற்கும் எதிர்காலத்திற்குமான பாதுகாப்பைத் தந்தாலும்; தராவிட்டாலும்; அவர்கள் விழிப்புடனிருப்பது மட்டும் அவசியமானதாகும். மேலும் அம்ஸ்ரடாம் உடன்படிக்கையைக் கோட்டைவிட்டுவிட்டு நாம் சத்தற்ற மற்ற விடயங்களில் போட்டி விவாதங்கள் நடத்திவருவது எவ்வளவுதூரம் ஆரோக்கியமானது என்பதும் சிந்திக்கப்படவேண்டியதே.

> புலம்பெயர் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அம்ஸ்ரடாம் உடன்படிக்கை அவர்கள் அடையாளத்திற்கும் எதிர்காலத்திற்குமான பாதுகாப்பைத் தந்தாலும்; தராவிட்டாலும்; அவர்கள் விழிப்புடனிருப்பது மட்டும் அவசியமானதாகும்.

ராகவன்

## புலம் பெயர்ந்தோரின் தூதுவன்!

# விஞ்ஞானி ஐன்ஸ்டைன்!

புலம் பெயர்ந்த மக்களென்றால் யார்? இப்படியொரு கேள்விக்கு திட்டவட்டமான வரையறையைக் கூறுவது கடினமான காரியம். எனினும் இன்று உலகை மேலாட்சி செய்து கொண்டிருக்கும் முதலாளித்துவம், கம்யூனிசம், அணிசேராமை ஆகிய மூன்று தலைமைக் கொள்கைகளினதும் அடிசாறுதல் அல்லது சுருக்கிலேயே உலகமெல்லாம் பரந்து வாழும் 140 இலட்சத்திற்கும் மேற்பட்ட புலம் பெயர்ந்த மக்கள் என்று கூறுவது ஓரளவு பொருத்தமானதாயுள்ளது. உலகப் பந்தில் தனியாக அடையாளப் படுத்தப்பட்டு வரும் புலம் பெயர்ந்த மக்களின் வாழ்க்கைக்கு ஓர் எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டியவர் விஞ்ஞானி அல்பிரட் ஐன்ஸ்டைன். இவரது வாழ்க்கையும் கண்டுபிடிப்புகளும் புலம்பெயர்ந்த மக்களிடையே புதிதாக வாசிக்கப்பட வேண்டியவை.

அல்பிரட் ஐன்ஸ்டைன் ஜேர்மனியில் உல்ம் என்ற சிறிய நகரத்தில் 1879-ம் ஆண்டு மார்ச் 14-ம் திகதி பிறந்தார். இவர் ஓர் ஜேர்மனியரல்ல யூத இனத்தைச் சேர்ந்தவர். இவரது தாய் தந்தையர் ஜேர்மனியில் புலம் பெயர்ந்து வாழ்ந்த போதே இவர் பிறந்தார். இவர் தன்னுடைய வாழ்வில் ஆரம்பப் பள்ளிப் படிப்பைக்கூட ஒழுங்காக முடிக்கவில்லை. காரணம் இவர் ஜேர்மனியிலிருந்த பெற்றோர் இத்தாலிக்கு பயணமானதால் இவருடைய ஆரம்ப கால வாழ்வே பெரும் சிரமங்களுக்கிடையேயே நடைபெற்றது. எனினும் சிறுவயது முதலே கணிதம், அறிவியல் போன்றவற்றில் மிகுந்த ஈடுபாடுடையவராகத் திகழ்ந்தார். 1902-ம் ஆண்டு ஜேர்மனியில் உள்ள பேர்ன் விஞ்ஞான நிலையத்தில் இவர் ஓர் மூன்றாம்தர ஊழியராக வேலைக்கு அமர்ந்தார். 1905-ம் ஆண்டு சுவிற்சலாந்தில் உள்ள தொழில் நுட்ப உயர் கல்லூரியில் மேற்படிப்பைப் படித்து டாக்டர் பட்டம் பெற்றார். 1914-ம் ஆண்டு பேர்லினில் பேராசிரியராகக் கடமைபெற்றார். 1933-ல் ஹிட்லரின் நாசிக்கட்சி அதிகாரத்திற்கு வந்து யூதர்களுக்கெதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டபோது இவர் ஜேர்மனியிலிருந்து அமெரிக்காவிற்குப் புறப்பட்டு பிறின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளரானார்.

ஐன்ஸ்டைனின் பிரதான கோட்பாடு $E=MC^2$ என்பதாகும் E=சக்தி M=திணிவு $C^2$=ஒளியின் வேகத்தின் வர்க்கம். இக்கோட்பாட்டின்படி திணிவை $C^2$ ஆல் பெருக்கும்போது சக்தியின் அளவு கிடைக்கும் என்பதாகும். அணுகுண்டை உருவாக்குவதற்கு இதுவே அடிப்படையான கோட்பாடாகும். ஐன்ஸ்டைனைப் பொறுத்தவரை அணுசக்தியைப் போருக்காகப் பயன்படுத்துவதற்கு அவர் முற்றிலும் எதிரானவர். ஆனால் அவருடைய அனுமதியின்றியே அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனால் இக்கோட்பாடு அணுசக்தி உருவாக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. இரண்டாவது உலக யுத்தத்தின்போது வீசப்பட்ட அணுகுண்டுகள் ஜப்பானுக்கு மிகப்பெரிய துன்பத்தை உருவாக்கியதாகக் குறிப்பிட்டார். இவர் கொடிய போருக்கெதிராக குறிப்பிட்ட கருத்துக்களால் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தூதுவராகப் புகழப்பட்டு



ருக்கிறார்கள். ஆயினும் ஐன்ஸ்டைன் இறுதிவரை தனது கொள்கையில் எந்த மாற்றமும் செய்யவில்லை.

1905-ம் ஆண்டு இவருடைய வாழ்வில் முக்கியமாகக் குறிப்பிடக்கூடிய காலப்பகுதி. அவ்வாண்டிலிருந்துதான் ஐரோப்பா முழுவதும் இவருடைய பெயர் பிரபலமாக அடிபடத் தொடங்கிறது. காரணம் அப்போதுதான் இவருடைய கோட்பாட்டை முதன்முதலாக வெளியிட்டார். இது 1910-ல் நோபல் பரிசுக்கு சிபாரிசு செய்யப்பட்டாலும், நோபல் பரிசுக் குழுவிலிருந்த மரபு ரீதியான விஞ்ஞானிகளால் அது தொடர்ந்தும் நிராகரிக்கப்பட்டே வந்தது. ஆயினும் 1922-ம் ஆண்டு இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஆனால் அது அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட இணைந்த ஒளிக் கோட்பாட்டிற்கே வழங்கப்பட்டது. ஐன்ஸ்டைனின் கருத்துப்படி ஒளி வளையும். அது புறப்பட்ட இடத்திற்கே வந்து சேருமென்றும் கூறுகிறார். நட்சத்திரத்திலிருந்து புறப்படும் ஒளியானது 0.00049 பாகை வளைவடைகிறதெனக் கூறினார். பிரபஞ்சமும் இப்படியேதான் இயங்குகிறது. அது ஒரு புள்ளியிலிருந்து உருவாகி ஒரு குடைபோல விரிவடைந்து புறப்பட்ட இடத்தை நோக்கிய திரும்பிவரல் [illegible] நிலைபெற்றிருக்கிறது. இதனால் வளைந்து செல்லும் ஒளியின்மூலம் பிரபஞ்சத்தை மேலும் ஒருபடி சிறப்பாக விளக்கிய விஞ்ஞானி என்ற பெருமை அவருக்கு கிடைத்தது.

ஐன்ஸ்டைன் தனக்கு முந்திய விஞ்ஞானி நியூட்டனின் கண்டுபிடிப்புகளிலும் பல மாற்றங்களை எடுத்துரைத்திருக்கிறார். பூமிக்கும் சந்திரனுக்கும் தொழிற்படும் ஈர்ப்பு [illegible] சந்திரன் பூமியைச் சுற்றி வருகிறதெனக் கூறினார் நியூட்டன். இக் கூற்றை ஐன்ஸ்டைனும் ஏற்றுக் கொண்டார். ஆனால் சந்திரன் பூமியைச் சுற்றும் பாதை தொடர்பாக சற்று வேறுபட்ட விளக்கத்தை எடுத்துக்கூறினார். ஓர் பஞ்சு மெத்தையில் இறுக்கமான ஒரு பொருளை போட்டால் ஏற்படும் கோப்பைபோன்ற குழிவு ஒன்றை நம் மனதில் கற்பனை செய்து கொண்டோமானால் இதை விளங்க முடியும். பூமி சுழலும் போது அதைச் சூழ்ந்துள்ள காந்த மண்டலத்தில் ஓர் குழிவு ஏற்படும். இக்குழிவின் வெளிவிளிம்பே சந்திரன் பயணிக்கும் பாதை என்று கூறினார்.



சாதாரண வாழ்வில் இவர் எதையும் ஒழுங்காகச் செய்ய மாட்டார். தான் எழுதிய குறிப்புக்களைக்கூட எங்கு வைத்தேன் என்பதை மறந்துவிடுவார். எதையும் ஒழுங்காக நேர்த்தியாகக் கடைப்பிடிக்க மாட்டார். தன்னுடைய அறையைக்கூட சுத்தமாக வைத்திருப்பதில்லை. இவருடைய மனைவியே அனைத்தையும் செய்து கொடுக்கவேண்டும். தனது 17-வது வயதில் [illegible] மிலேவா மரீக் என்ற பெண்ணைக் காதலித்தார். இது இவரது பெற்றோருக்குப் பிடிக்கவில்லை. ஆனால் அவர் [illegible]. 1903-ம் ஆண்டு [illegible] திருமணம் செய்து கொண்டார். 1904-ம் ஆண்டு இவர்களுக்கு அல்பிரட் என்ற ஒரு மகன் பிறந்தார். இவர் பிற்காலத்தில் தந்தை [illegible] பிரபலமான பேராசிரியரானார். 1910-ல் எட்வேட் என்று இன்னொரு மகன் பிறந்தார். இவர் அல்பிரட் [illegible] ஓர் மனநோயாளி. [illegible] 1916-ம் [illegible]



கடிதங்களைக் கண்டுபிடித்த போது, அவருக்கு 1902–லேயே ஒரு குழந்தை பிறந்து 1903 கோடையில் மிகவும் கொடிய நோயினால் தந்தையைக் காணா மலே இறந்தும் விட்டதாக எழுதி யுள்ளார். இவருக்கு நோபல் பரிசு கிடைத்தால் அப் பணம் தனக்கும் பிள்ளைகளுக்குமே சேரவேண்டும் என்று எழுதி வேண்டிக் கொண்ட பின்னரே முதல் இவரது முதல் மனைவி இவரை விவாகரத்து செய்து கொண்டார். விவாகரத்து மிகவும் துயரமானதென்பது இவர் கருத்து. தன் பிள்ளைகளை பேர்ளின் புகையிரதநிலையத்தில் வைத்துப் பிரிந்தபோது தன் கண் கள் கண்ணீரில் தாண்டுபோயின என்றும் இக்கடிதங்களில் எழுதி யுள்ளார். இளமையில் தனிமை துயரம் தரும், வயோதிபத்தில் இனிமை தரும் என்கிறார். 1919–ல் மறுமணம் செய்துகொண்டார்.

ஐன்ஸ்டைன் புலம்பெயர்ந்த தனது யூதமக்கள் பற்றி மிகுந்த அக்கறையுள்ளவராக இருந்திருக்கி றார். யூத மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென அடிக்கடி வலியுறுத்தி வந்தார். நாடற்ற சுமார் 6 மில்லியன் யூதர்கள் ஹிட் லரால் கொல்லப்பட்டபோது கலங் கினார். 2–ம் உலகப் போர் முடிந்த



ஐன்ஸ்டைன் ஓய்வு நேரங்களில் வயலின் வாசிப்பதன் மூலம் தனது சிந்தனைகளை கூட்டினார்

பின்பு இஸ்ரேல் என்ற நாடு அமைக்கப்பட்டபோது அந்நாட்டு மக்கள் அரசியல் வாதிகள் உட்பட அனைவரும் ஐன்ஸ்டைனையே பிரதம அமைச்சராகப் பதவி ஏற்க வேண்டுமென வலியுறுத்திக் கேட் டார்கள். ஆனால் அவர் அதற்கு முற்றாகவே மறுத்துவிட்டார். தான் ஒரு தனி மனிதனாக இருந்து உலகிற்குச் சேவையாற்ற விரும்புவ தாகத் தெரிவித்தார். எனினும் ஒரு புலம் பெயர்ந்த மனிதன் தன் உயர்ந்த வாழ்வால் தன்னுடைய தேசத்து மக்களாலேயே பிரதம அமைச்சர் பதவி கொடுத்து வரவேற்கப்பட்ட நிகழ்வு வரலாற் றின் பொன் எழுத்துக்களாகும். 1948–ம் ஆண்டு இவருக்குப் புற்று நோய் இருந்தமை கண்டுபிடிக் கப்பட்டது. இதனாலேயே 1955–ம் ஆண்டு மரணமடைந்தார். சாகும் போது இவருக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. அதை எழுதியவர் யாரெனத் தெரியவில்லை. அதில் இவரே பிரபஞ்சத்தின் மேன்மை தங்கிய பொறியியலாளர் என எழுதப்பட்டிருந்தது. மேலும் ஒவ வொரு புலம் பெயர் மக்களும் தாம் வாழும் நாடுகளில் தமது தாய் நாட்டைப் பெருமைப்படுத்தும் தூதுவர் போலவே வாழவேண் டும். ஓயாது அதன் சிறப்பிற்குப் பாடுபடவேண்டும். அப்படியாகப் பாடுபட்ட புலம் பெயர் மக்க ளால் அமைந்ததே இஸ்ரேலிய நாடு. அதனால்தான் அம் மக் கள் ஐன்ஸ்டைனை தமது நாட் டின் தூதுவர் என்றே இன்றும் மரியாதையாக அழைத்து வரு கின்றனர்.

★★

# கைக்கடிகார வடிவில் மொபைல் தொலைபேசி!



மொபைல் தொலைபேசியைக் கண்டுபிடிக்காவிட்டாலும் அதற்கு, 'செலுலார்' என்ற பெயரையாவது கண்டுபிடித்து, அதையும் எல்லோரும் பாவிக்கத் தொடங்க முன்னரே கைக்கடிகார வடிவில் விற்பனைக்கு வந்திருக்கிறது புதிய மொபைல். ஏற்கனவே பல துப்பறியும் படங்களில் இவ்வகையான தொலை பேசிகளைப் பார்த்திருக்கிறோம். இப்பொழுதோ ஆயிரம் டொச் மார்க்குகள் கொடுத்தால் நாமும் இதைக் கைகளில் கட்டிக் கொள்ள முடிகிறது. ஓரிரு வருடங்களில் இதன் விலை அடிமட்டத்திற்கு விழுந்துவிடும் என்கிறார்கள். அப்போது இலகுவாக வாங்கிக் கொள்ளலாம். மேலும் இதன் சிறப்பு என்னவென்றால் தொலைபேசிக்கான இலக்கத்தை வாயினாலேயே கூறிவிடலாம். அதனுள்ளே பொருத்தப்பட்டிருக்கும் சின்னஞ்சிறிய 'மைக்' அதை உள்வாங்கி, நீங்கள் குறிப்பிட்ட இலக்கத்திற்குரிய தொலைபேசியுடன் இணைப்பை ஏற்படுத்திவிடும். கைக்கடிகாரமும் தொலைபேசியும் ஒன்றாகவே இருக்கப் போகிறதென்றால் இப்போது நம்மிடமிருக்கும் கைக்கடிகாரங்களையும் தொலைபேசிகளையும் என்னதான் செய்வது? "நமக்கா வழியில்லை" என்று சிரிக்கிறார்கள் விஷயம் தெரிந்தவர்கள்.



# நினைவுகள்

விடுதலை பெறுவது
எக்காலம்?
எம் வீட்டடைவதும்
எந்நாளோவென்று
கதைத்த வார்த்தைகளில்
கடிதம் எழுதிய
எனதருமை கண்மணி!

அகதி வாழ்வும்
எமக்கோர் ஆயுதமற்ற
யுத்தமே என்னும்
உன் புலம்பல் யாவும்
நாளை சுவடுகளின்றி
அழியலாம்!

ஆண்டுகள் பல
போரில் கழித்து
எமதன்னை பூமியில்
முன்பு முகமழிந்த
அப்பொன்னாட்கள்
போலவே
நானும், நீயும்
குதித்து, குதித்து
விளையாடலாம்!

எம் தோளில் கனக்கும்
துவக்குகளை
மண்ணில் நிமிர்த்திவிட்டு
பள்ளிச் சாலையில்
நாமும் பாடம் படிக்க
மீளலாமடி!

முன்போல்
அம்மாவும்,
அண்டைவீட்டு
அக்காள்கூட
கொல்லைப் புறத்துக்
கீரைக் குழிகளில்
கனவுகளை
விதைக்கவும்
காணுதல் கூடும்
எம் கண்கள்!

எதிரியின் குண்டுகள்
துளைத்த
எம் அண்ணனின்
முகமும்,
தீ வைத்துத் தீர்த்த
அப்பாவின் வாழ்வும்,
இன்னும் மண்ணோடு,
மண்ணாய்
மடிந்துபோன
ஆயிரமாயிரமான
எம் மக்களின்
நினைவுகளும்கூட
நாளை
காலச் சுழற்சியில்
கரைந்து போகலாமடி!

ஆனால்
இரவுகளில் நாமும்
உறங்கையிலே,
எங்கோ பறக்கும்
விமான ஓசை கேட்டு
"ஷெல்" அடிக்க
வாரானோ
என்று எம் செல்ல
நாய்க்குட்டி,
உன் குட்டிப் பாவாடை
பற்றி
பழைய ஞாபகத்தில்
"பங்கருக்குள்"
இழுக்குமே!
அதன் நினைவை
மாற்றுவதெப்போதடி
எனதருமை கண்மணி?

குறிஞ்சிவேந்தன்
சென்னை
தமிழ்நாடு

## தேடல்!



அதை
நெடுநேரமாகத் தேடினோம்!
களைத்தோம்!
சோர்வடைந்தோம்!
அதன்பிறகும்
தேடினோம்.
கிடைக்கவில்லை.
இப்பொழுதும்
தேடுகிறோம்.
அதையல்ல
எதைத் தேடினோம் என்பதை.

அர்ஜுன்

## தாலி

அப்பாவின்
வைத்தியக்கடனில்
மூழ்கிப்போனது
அம்மாவின் தாலி.

## புதுமாப்பிள்ளை

நிலம், வீடு
கைமாறியது
வீட்டில் புதுமாப்பிள்ளை

# மடமையைக் கொழுத்துவோம்!

# தேடலும்

ஒரு பெண்ணின் சுய விருப்பத்துக்கு மாறாக அவளைத் தன் இச்சைக்குட்படுத்தும் வன்முறைச் செயலானது, 'பாலியல் வன்முறை', 'பலாத்காரம்', 'கற்பழிப்பு', 'கெடுத்தல்' போன்ற பல பதங்களால் குறிப்பிடப்படுகிறது. பெண்ணிலைவாதச் சிந்தனைகள் மேலோங்கி பல கோணங்களில் ஆராயப்பட்டு பெண்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இக் கால கட்டத்தில் பெண்களுக்கெதிரான அவர்களின் உணர்வுகளைச் சிதறடிக்கும், இத்தகைய வன்முறைச் செயலானது முற்றுமுழுதாக கண்டிக்கப்பட வேண்டியதொன்று. மிருகத்தனமான இந்த வெறிக்கு பழிவாங்கல், காமம் என்ற இரு முக்கிய அடிப்படை நோக்கங்களைக் காரணங்களாகக் கொள்ளலாம்.

இவற்றுள் பழிவாங்கல் நோக்கமானது, எமது சமூகத்தின் மிகப் பலவீனமான ஒரு பக்கமாகவே கருத வேண்டியுள்ளது. புராண இதிகாச காலத்திலிருந்து இன்று வரை பெண்களுக்கு மட்டுமே பல நிபந்தனைகளை விதித்து பெண் எனப்படுபவள் இரண்டாம் தரப் பிரஜையே என நிரூபிக்கப்பட்டு வந்திருக்கின்றது. 'பதிவிரதை', 'விபச்சாரி', 'விதவை' போன்ற பல பட்டங்கள் பெண்களுக்கே கொடுக்கப்படுகின்றன. 'கற்பு' என்ற மூன்றெழுத்துப் போர்வையில் பெண்ணானவள் பல இன்னல்களுக்கு உட்படுத்தப்படுகிறாள். கற்பைக் காப்பவளே தமிழ்ப் பெண் என்ற கருத்து எம்மிடையே மிகவும் ஆழமாக விதைக்கப்பட்டுவிட்டது. இத்தகைய கருத்துகளால் தான் பெண்ணானவள் வன்முறைக்கு உடந்தையாக இல்லாதபட்சத்திலும் சமூகத்தால் கடுமையாக தண்டிக்கப்படுகிறாள். 'கற்பிழந்தவளாய்', 'மானமிழந்தவளாய்', 'தீண்டத்தகாதவளாய்', 'குடும்ப கௌரவத்தை குழிதோண்டிப் புதைத்தவளாய்' நடைப்பிணம் ஆக்கப்படுகிறாள். எனவேதான் ஒரு குறிப்பிட்ட நபரையோ, அல்லது குறிப்பிட்ட குடும்பத்தையோ பழிவாங்க பாலியல் வன்முறை ஒரு ஆயுதமாகக் கொள்ளப்படுகிறது. அதாவது பழிவாங்கப்படும் நபர் அல்லது குடும்பம் சமூக அங்கீகாரத்தை இழக்கப் பண்ணுதலே இதன் நோக்கமாகும்.



அடுத்ததாக ஒரு இனத்துக்கெதிரான அல்லது சாதிக்கெதிரான பழிவாங்கல் நடவடிக்கையாகவும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறை என்ற கொடூரமான உத்திமுறை கையாளப்படுகிறது. இத்தகைய பழிவாங்கல் முறையானது போராட்ட வரலாறுகளில் முக்கிய பங்கு வகிப்பதை நாம் காணலாம். போராட்ட வரலாறுகளை எடுத்துப் பார்த்

# விவாத அரங்கு

# தெளிவும்

தால் இன அழிப்புக்கான பெண்கள் பலாத்காரமானது எவ்வளவு கொடூரமாக நடந்துள்ளது என்பது விளங்கும். இந்த நாடுகளின் வரிசையில் எம் தாய்நாடும் இன்று முன்னணியில் நிற்கிறது என்பது மிகவும் வேதனைக்குரிய விடயமே. இன்று தமிழ் இன அழிப்புக்காக சிங்களப் பேரினவாதம், பெண்கள் பலாத்காரம்' என்ற பயங்கரமான ஆயுதத்தால் தமிழ்ப்பெண்களைத் துண்டாடிக் கொண்டிருக்கிறது. சிறுமிகள், வயது வந்தோர் என்ற பேதம் பாராது சிங்கள இராணுவம் மிருகத் தனமாகச் செய்யும் அராஜக நடவடிக்கைகளைப் பற்றி அன்றாடம் கேள்விப்படுகிறோம். சிங்கள வேட்டை நாய்களால் கடித்துக் குதறப்பட்டு எத்தனை 'கிருஷாந்திகள்' மண்ணில் புதைக்கப்பட்டார்களோ யாரறிவர்? இந் நிலையில் இன்றைய ஈழப்போராட்டத்தில் பெண்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள் என மார் தட்டி பெருமைப்பட்டுக் கொள்வதா, அல்லது இன அழிப்புக்காக எம்மினப் பெண்களை வேட்டையாடுகிறார்களே படுபாவிகள் என வேதனைப்படுவதா? தம்மைச் சுற்றி நடக்கும் இந்தப் பாதகச் செயலைக் கண்டு மனங் கொதித்து, கையில் துப்பாக்கிகளையும் மனதில் உறுதியையும் ஏந்திக் கொண்டு வீரநடை போடும் வீராங்கனைகளின் துணிவே இக்கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லும்.

பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைக்குப் பொதுவான காரணம் மனதில் எழும் காம உணர்ச்சியே. ஒரு பெண்ணின் விருப்பத்துக்கு மாறாக அவளைத் தொடும் உரிமை அவளது கணவனுக்குக் கூடக் கிடையாது. இதை மீறி தன் மனைவியை உடலுறவு கொள்ளக் கட்டாயப்படுத்தும் கணவன் கூட காமவெறி பிடித்த காதகனே. மதுபோதையில் பெண்களைப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தும் கொடூரமும் இன்று பெருகிக் கொண்டு வருகிறது. இக் கேடுகெட்ட செயல்பாடானது 'இனிஷியல்' இல்லாத பல அநாதைக் குழந்தைகளின் ஜனிப்புக்குக் காரணமாக அமைகிறது. உலக அனுபவமேயற்ற பிஞ்சுப் பருவத்திலேயே ஆண்களின் காமவெறியினால் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்படும் சிறுமிகள் சமூகத்தில் குற்றவாளிகளா?

இப்படி பலவகைச் சந்தர்ப்பங்களில் பலவகை நோக்கங்களுக்காக பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் பாலியல் வன்முறையினால் முற்றாக பாதிக்கப்படுவதும், குற்றவாளியாக்கப்படுவதும் பெண்களே. பலாத்காரத்துக்குள்ளான பெண்கள் தற்கொலை செய்தல், தம்மைத் தாமே மறைத்து வாழ்தல், வாழ்நாள் முழுவதும் கண்ணீர் விடுதல் போன்ற நடவடிக்கைகளால் செய்யாத ஒரு குற்றத்துக்காக தாமே தண்டனையை விதித்துக் கொள்கிறார்கள். இந்த மனநிலை முற்றாக மாறவேண்டும். தம்மைப் பலாத்காரப் படுத்தியவர்களைக் குற்றவாளியாக்கி, அவர்களைத் தண்டிக்குமென உறுதியை இப் பெண்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பெண்ணும் தனக்கெதிராக இழைக்கப்பட்ட அநியாயத்தை எதிர்த்துப் போராடும் மனநிலையை வளர்த்துக் கொள்வது இவர்களின் தனிப்பட்ட கடமை.

இனி, இப் பெண்கள் சம்பந்தமாக எமது சமூகம் செய்ய வேண்டிய கடமை என்ன? இப் பெண்கள் பற்றின சிந்தனையில் மாற்றம் ஏற்பட வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்களின் எதிர்கால வாழ்வை மேலும் மேலும் கேள்விக்குறியாக்கும் நிலையை சமூகம் உருவாக்கக் கூடாது. இதற்குப் பதிலாக மனோபலமிழந்து நிற்கும் இப்பெண்களுக்கு பக்கபலமாய் நின்று அவர்களது போராட்ட உணர்வை வளர்க்க உதவ வேண்டும். குற்றவாளிகளைக் கண்டுபிடித்து சட்டபூர்வமான தண்டனையை வாங்கிக் கொடுக்க சமூகம் முன்வர வேண்டும். மிருகத்தனமான இவ்வன்முறைக்கெதிராக உலகம் முழுவதும் கேட்கும்படி குரல் எழுப்ப வேண்டும். இது மனிதம் அழியக் கூடாது என்ற சிந்தனையுள்ள ஒவ்வொருவரதும் கடமையாகும்.

**மல்லீஸ்வரி ஆதவன்**

# சுப்பிரீம் கோட் சுறுக்கர் அம்மான்

## கொழும்பிலிருந்து குமுறுகிறார்



வணக்கம் பிள்ளையள்,

பிள்ளையள் ஜெயசிக்குறு பாதை திறப்பு ஒரு வருச மாச்சல்லோ அதுபற்றி தமிழீழப் பகுதியெங்கும் பெரிய ஆரவார மாம். எங்கடை மக்கள்.... அது பற்றி பெருமையோடும் உணர்வோடும் உள்ளதாக எனக்கு என்ரை பேத்தி கடிதம் போட்டிருக்கிறா. அதோடை செய்தி என்ன தெரியுமோ... எங்கடை தம்பி ஒரு வருச பூர்த்தியை முன்னிட்டு நீண்ட செய்தி வெளியிட்டவரல்லோ... அதைப் பார்த்தாவது இந்த தமிழ் கட்சியள் திருந்துமா? மனம் வருந்துமா? பெரிய முசுப்பாத்தி என்ன தெரியுமோ.... ரத்வத்தையாரும் தன்ரை சகாக்களை அழைச்சு தன்ர படைகளின்ர சாகசத்தைக் கதைகதையாச் சொல்லி பெருமை அடைந்து கொண்டாராம், என்ன.. தெரியுமோ? உலகின் மிகப் பெரிய கெரில்லாப் படை, வளர்ந்து வரும் தொழில்நுட்ப சாதனங்களான ஆயுதங்களைக் கொண்ட ஒரு தமிழ்ப் படையை எதிர்த்து... ஒரு வருஷத்துக்கும் மேலாக எங்கடை படைப்பினைத் தாக்குப்பிடிக்கினம் எண்டாராம்! பார்த்தியளோ சிறுமை எப்பிடி பெருமை ஆகுதெண்டு.

இன்னுமொரு சங்கதி தெரியுமோ.... அயல்வீட்டாரின் வெளியுறவுத் துறையார் சொன்னாராம் அயல் நாடுகளில் அச்சுறுத்தல் இருப்பதால் நாங்கள் அணு வெடிப் பரிசோதனை செய்தோமென்று கூற..... சந்திரிகாவின்ர வெளியுறவார் என்னனண்டால் தங்களுக்கும் பயப்படுகினம் எண்டு நினைச்சு..... சேட் கொளரைத் தூக்கிப் போட்டாராம். (இது அம்மானின்ர பகிடியங்கோ)

சும்மா சொல்லக்கூடாது பிள்ளையள் இங்க வந்த ஐ.நா. பிரதிநிதி சம்மட்டியடி அடிச்சுப் போட்டார். யுத்தம் நிறுத்தப்படவேண்டும், மூன்றாம் தரப்பு, பேச்சு வார்த்தையெண்டெல்லாம்.... நெத்திக்கு நேர சொல்லிப்போட்டாராம்.... மனிசன் வன்னிக்குப் போய் எல்லாத்தையும் அக்கு வேறு ஆணிவேறையாய் அலசிப் போட்டுதாக்கும். இதால சந்திரிகா கோஷ்டி தடுமாறிப்போச்சினம் கண்டியளே.

வெளிநாட்டின் உதவியோட யாழ்ப்பாணத்தில உள்ள குளங்கள் புனரமைப்பு செய்யப்படப் போவதாக செய்தி அடிபடுகுது.... முதல்ல.. இந்த தமிழ்க் கட்சிகளின்ர மனங்களை புனரமைப்புச் செய்ய நீங்க வசிக்கிற ஏதாவது நாடு உதவாதா பிள்ளையள்.

அண்மையில பிரியாவிடை முடிஞ்ச கையோட பிளந்துபோன பிரிகேடியர் விஜயரத்தின சாக முதல்ல.... கைகாட்டி இன்னொரு பிரிகேடியரை வரவேற்றவராம். இதுக்குப் பிறகு கொழும்பில யாரும் கைகாட்டுறதே இல்லையாம். கைகாட்டி ஏன் வம்பை விலைக்கு வேண்டுவான் எண்டாக்கும்.

வெளிநாட்டின் உதவியோட யாழ்ப்பாணத்தில உள்ள குளங்கள் புனரமைப்பு செய்யப்படப்போவதாக செய்தி அடிபடுகுது.... முதல்ல... இந்த தமிழ்க் கட்சிகளின்ர மனங்களை புனரமைப்புச் செய்ய நீங்க வசிக்கிற ஏதாவது நாடு உதவாதா பிள்ளையள்.

அடுத்தது பிள்ளையள், யாழ்ப்பாண மேயருக்கு நடந்தது அறிஞ்சிருப்பியள். இந்தச் சுறுக்கர் அம்மான் ஏற்கனவே சொன்னது நினைவிருக்கோ சத்தியப்பிரமாணம் எடுக்க முதல்ல... வியாழ மாற்றம் பற்றி அறியவேணும் எண்டு கனபேர் சொன்னதுகள். உண்மையாய் வியாழமாற்றம் பற்றி குறிப்புப் பார்த்தவைதானாம். அவங்கட தலைமையாக்கள் குறிப்பு கொண்டுபோய் கேட்டுப்போட்டுச் சொன்னவையாம். தங்கச்சிக்கு இப்ப யோகம் உச்சத்திலயாம். பேரும்புகழும் உயரப்போகுது. எந்தப் பகையும் வராது எண்டு சொன்னவையாம். அவவும் நம்பி காலை விட்டுட்டா. முதல்ல... காலை விடுவது எங்கேயெண்டல்லோ யோசிக்கவேணும் பிள்ளையள்.

குறிப்புப் பார்த்துச் சொன்னவையும் இப்ப குழம்பிப்போய் இருக்கினமாம். இன்னும் பல உயிரை கொண்டுபோகும்போல கிடக்கு எண்டுதான் குழம்புகினம். ஏற்கனவே சனியன் மாற்றமும் நாட்டிலே குழப்பி விட்டது. இப்ப எல்லாரும் அதைத்தான் எண்ணிக் கொண்டு இருக்கிறம். சனி மாற்றம் கிட்டுது எண்டவுடன்.... இரண்டு பெரிய தலை போட்டுதாம்.

ஐந்து லட்சம் மக்கள் வன்னிக்குள்ள உலையேற்ற வழியில்லாமல் கிடக்க... காரணமானவர்கள் தலையைப் பற்றித்தானே யோசிக்க வேணும். விதைப்பு ஒண்டு இருந்தால். அறுவடை தேவைதானே!

வேறென்ன பிள்ளையள் எனக்கும் சரியான உடம்புவலி அடுத்த முறை சந்திப்பம்.

## சைக்கிள் ஓட்டக்காரர்களே உசார்! போட்டிக்கு வருகின்றன நாய்கள்!





மலைப் பகுதிகளில் பங்குபற்றும் நீண்டதூர சைக்கிள் ஓட்டக்காரருக்குப் போட்டியாக நாய்களும் விரைவில் களத்தில் குதிக்கலாம் போலிருக்கிறது. டோக்கியோவின் கிழக்குப் பகுதியில் உள்ள நொகானோ நகரத்தில் மலைப் பகுதிகளின் மீது களைப்பின்றி நெடுந்தொலைவு சைக்கிள் ஓடுகிறது. மொமாற்றோ என்னும் இந்த நாய். ஓடி முடிந்ததும் எலும்புத்துண்டை தாராளமாக வழங்குகிறார் பயிற்சியாளர். இதனால் மனிதர்களைவிட உற்சாகமாக சைக்கிளை மிதிக்கிறது மொமாற்றோ. மலையில் ஏறுவது, வேகமாக இறங்குவது, வளைவுகளில் சடுதியாகத் திரும்புவது யாவற்றிலுமே கெட்டித்தனமுடையதாக விளங்குகிறது. ஆனால் போட்டியில் இறுதிக் கோட்டைத் தொடும் போது வேகமாக ஓட வேண்டுமென்ற விடயத்தை விளங்கமுடியாமைதான் இதற்குள்ள ஒரேயொரு சிரமம் என்கிறார் பயிற்சியாளர்.

## புகைத்தல் உலகத்தின் மிகச் சிறிய மனிதனின் உயிரையும் குடித்தது



உலகத்தின் மிகச் சிறிய மனிதர் முகமட். இவரது உயரம் 57 செ,மீ. மட்டுமே. 'கின்னஸ்' சாதனை ஏட்டில் உலகின் சிறிய மனிதரென இவருடைய பெயரே குறிப்பிடப்பட்டுள்ளது. உறங்கப் போகுமுன் ஒவ்வொரு நாளும் அந்தச் சாதனைப் புத்தகத்தில் தனது படத்தைப் பார்த்தபின் உறங்குவதே இவருக்கு ஒரேயொரு ஆனந்தமாக இருந்து வந்துள்ளது. சுமார் 36 ஆண்டுகளாக இவர் 57 செ.மீற்றராகவே இருந்து வந்தார். இவருடைய வளர்ச்சிக் குறைவுக்குக் காரணம் இதயத்தில் இரத்தம் உறைவதே என்று கூறுகின்றார்கள் வைத்தியர்கள். இவருடைய மகிழ்ச்சி புகைப்பிடிப்பது மட்டுமே. இதனால் சுவாசப்பை பழுதடைந்து ஒருவருடமாக மூச்செடுக்கச் சிரமப்பட்டு வந்தார். இதுவே இவரது மரணத்திற்குக் காரணமாகியது. மரக்கறிக் கடையில் வேலை செய்தும் தெருவில் நின்று இனிப்பு விற்றும் வந்த இவரை நண்பர்களும் வைத்தியர்களும் சேர்ந்து அடக்கம் செய்தனர்.

# பொது அறிவுப் போட்டி இல: 3

பாலம் சஞ்சிகை நிறுவனத்தினரால்நடாத்தப்படும் அறிவுப் போட்டி இல—3. ஒவ்வொரு போட்டியிலும் ஐந்து கேள்விகள் கேட்கப்படும். தொடர்ந்து நடைபெறும் 10 அறிவுப்போட்டிகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் வாசகர்களுக்கு பாலம் சஞ்சிகையினரால் சிறந்த பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படும். அதிகூடிய புள்ளிகளை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெறும் பட்சத்தில் குலுக்கல் முறையில் வாசகர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பாலம் சஞ்சிகை கிடைக்கப்பெற்று ஒரு மாதத்திற்குள் விடைகளை எழுதி எமக்கு அனுப்பி வைக்கவும். விடைகளை கீழே உள்ள படிவத்திலேயே நிரப்பி அனுப்பவும்.

## கேள்விகள்:

1- I B M கணணி - இதில் IBM என்ற எழுத்துக்களின் ஆங்கிலப் பதம் என்ன?

2- முன்னர் பாரசீகம் என்று அழைக்கப்பட்ட நாடு பின்னர் இரண்டாகப் பிளவு பட்டது. அந்நாடுகளின் பெயர் என்ன?

3- கொம்பிலே கண் உள்ள பிராணி எது?

4- 1982-ம் ஆண்டு சுதந்திரம் பெற்றபோது ஒரு நாடு தனது பெயரை சிம்பாப்வே என மாற்றிக் கொண்டது. சிம்பாப்வேயின் முன்னைய பெயர் என்ன?

5- ஊசியால் குத்தி குத்தி நோயைக் குணப்படுத்தும் நூதன சிகிச்சை முறைக்கு பெயர் என்ன?

..............................................................................................................

## பொது அறிவுப் போட்டி இல:3

பாலம் சஞ்சிகை கிடைக்கப்பெற்ற திகதி:- ..............................

விடைகள்:

1 ..................................................

2 ..................................................

3 ..................................................

4 ..................................................

5 ..................................................

பெயர்:- ..................................................

முகவரி:- ..................................................

..................................................

..................................................

தொலைபேசி இல.:- ..............................

அனுப்பவேண்டிய முகவரி:-

PAALAM PUBLICATIONS
SONDER PARKEN 10,ST.TV
7430 IKAST
DENMARK

லண்டன் வாழ் மக்களிற்கு ஓர் அழைப்பு

# Protect

## Insurance Services Ltd.

226 Ealing Road, Wembley, Middlesex HA0 4QL.

**Tel: 0181 900 0075 Fax: 0181 795 1745**

*You Get Insurance Cover*

*in*

**Car Van House & Shop**




**Contact - Siva on**

**Call Now: 0181 900 0075**

**FREE CAR & FIRST CLASS SERVICE ON ACCIDENT CLAIM**

இந்தியா பாகிஸ்தான் அணுகுண்டுப் பரிசோதனை!

# இனியொரு விதி செய்வார்களா?

இந்தியா அணுகுண்டுப்பரிசோதனையை நடாத்தி இரண்டு வாரங்கள் ஓடவில்லை. அதற்குள் பாகிஸ்தானும் தனது பரிசோதனையை ஏட்டிக்குப் போட்டியாக நடத்தி முடித்துவிட்டது. "அடுத்த நூற்றாண்டின் மிகச் சிக்கலான பிரச்சினை மனிதனின் பசியை நீக்குவதோ, புதிய எரிபொருளைக் கண்டுபிடிப்பதோ, சனத்தொகையைக் குறைப்பதோ அல்ல. அணு ஆயுதப் போட்டா போட்டியைக் குறைப்பதுதான்." என்று விஞ்ஞான எழுத்தாளரான ஆதர் சி. கிளாக் குறிப்பிட்டதைப் போலவே காரியங்கள் நடக்க ஆரம்பித்துவிட்டன. விமானக் குண்டோ, அல்லது அணுகுண்டோ எதுவாக இருந்தாலும் வெடிக்க வைக்கப்படாத் நிலையில் மட்டுமே மட்டுமே பேசுவது. இதுவரை பூமியில் சுமார் 2000–ற்கும் மேற்பட்ட அணுகுண்டுப் பரிசோதனைகள் நடத்தப்பட்டுவிட்டன. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்சித் தலைவர்கள் ஏதோவொரு காரணத்தைக் கூறியுள்ளனர். ஆனால் இயற்கை எந்தவொரு மொழிக்கும் கட்டுப்பட்டதல்ல. "ஒரு தாக்கத்திற்கு அதன் எதிர்த் தாக்கம் சமமானது" என்ற இயற்கையின் விதியை தலைவர்களின் எத்தகைய சமாதானங்களாலும் மாற்றியமைத்துவிட முடியாது. கறுப்பு மழை, காலநிலை மாற்றம், பூமியை மூடி உயிரினங்கள் வாழ்வதற்குப் பாதுகாப்பளிக்கும் ஓசோன் வளிமண்டலப் படையின் மீது நடைபெறும் பாதிப்புக்கள் பூமியதிர்ச்சியென உலகிலுள்ள புல்பூண்டு முதல் ஆறறிவுள்ள மனிதன் வரை வெடிக்க வைத்த அணுகுண்டிற்கு இன்னொரு விலை செலுத்தியே ஆகவேண்டியது நிஜம்.




அணுகுண்டு அரசியல் பற்றிப் பட்டிமன்றம் நடத்த முன்னர் அதன் தாக்கங்கள் பற்றி அறிந்திருப்பது பூமியில் வாழும் ஒவ்வொரு பிரஜைக்கும் உரிய கடமையாகிறது. அணு ஆயுதங்களில் உட்கருப் பிளவு, ஆயுதங்களில் உட்கரு இணைவு ஆயுதங்களென இரண்டு பிரதான பிரிவுகள் உள்ளன. அணுகுண்டு வெடிக்கும் போது அதில் தோன்றும் ஏராளமான ஆற்றல்கள் உட்கரு இணைவு நிகழ உதவுகின்றது. இதனால் குண்டு வெடிக்கும் இடத்தில் வெப்பநிலை பல மில்லியன்கள் அதிகமாகி மரம் செடி முதல் எல்லாமே பொசுக்கப்படும். சூரியனில் தோன்றும் வெப்பத்திற்கும் காரணம் இதுபோன்ற உட்கரு இணைவுதான். அணுகுண்டு வெடித்த இடத்தில் காற்று ஒரு மணி நேரத்தில் சுமார்



*1600 கி.மீ வேகத்தில் வீசும். 200 கி.மீ வேகத்தில் வீசும் சூறாவளியையே தாங்க முடியாதிருக்கும் மனிதர்கள் 1600 கி.மீ. வேகத்தைத் தாங்குவார்களா என்பது அவரவர் கற்பனைக்குரியதாகும்.*

மனிதர்கள் தங்களுக்குள் தோன்றும் முரண்பாடு களைத் தீர்க்க உபயோகிக்கும் ஆயுதங்களுக்கு ஓர் இறுதி எல்லை இருத்தல் வேண்டும். அந்த வீச்சின் இறுதிப் புள்ளியை அணுசக்திக்குள் நகர்த்தினால் மனிதன் பூமியில் இருத்தல் முடியாது. அணுகுண்டு தனியே மனிதர்களுக்கு மட்டும் எதிரானது என்ற கருத்தியல் மாற்றமடைந்து அது பூமிக்கெதிரானது என்ற எண்ணமாக விரிவடைந்து உலகம் முழுவ துமே பரவலாகப் பேசப்படுகிறது. மனிதன் அழிந் தால் மறுபடியும் உருவாதல் முடியும். ஆனால் பூமி அழிந்தால் மனிதன் மறுபடியும் உருவாதல் முடி யாது. இந்த உண்மையை உணர்ந்து 1970–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22–ம் திகதி அமெரிக்காவைச் சேர்ந்த கேயார் என்பவர் 2 கோடி மக்களைத் திரட்டி ஓர் ஊர்வ லம் நடத்தினார். இவர்கள் அனைவரும் பூமியைக் காப் பாற்றும்படி உலக நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்தனர். இதனால் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 22–ம் திகதி பூமி தினமாகப் (Earthday) பிரகட னப்படுத்தப்பட்டது.



1945–ம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் ஓர் நாள் காலை 8.15 மணியளவில் ENOLAGAY என்னும் பெயர் கொண்ட B–29 ரக விமானம் 9000 இறாத்தல் நிறையுள்ள குண்டை ஜப்பானில் வீசியது. இதற்கு மூன்று நாட்களுக்குப் பின் இன்னொரு தடவையும் இவ்விதம் நடாத்தப்பட்டது. இந்த அணுகுண்டுச் சோதனையால் சுமார் ஒரு இலட் சம் மக்கள் கொல்லப்பட்டார்கள். அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் 'ட்ருமேன்' அதன் பின் உலக யுத்தம் நின்று போனது. எனினும் ஜப்பான் வெள்ளைக் கொடியை உயர்த்திச் சரணடைந்த பின்னரே இக் குண்டுகள் வீசப்பட்ட மையால் இதையும் ஓர் அணுகுண்டுப் பரிசோத னையாகவே கருதி வாதிடுவோரும் உண்டு. அதே வேளை அணு குண்டின் தாக்கத்தைப் பார்த்ததும் அதைக் கண்டுபிடித்த விஞ்ஞானியான ஒபன்ஹீமர் வெற்றிக் களிப்பில் சிரிக்கவில்லை. அதைக் கண்டு பிடித்தது வாழ்வில் தான்விட்ட மாபெரும் தவ றெனக்கூறி கண்ணீர்விட்டு அழுதார்.

(பாலம் ஜூன் இதழில் வெளியாகிறது ஒபன் ஹீமரின் வாழ்க்கை வரலாறு)

இதுவரை உலகில் பாகிஸ்தானுடன் ஏழு நாடுகள் அணுகுண்டுப் பரிசோதனையை முடித்து விட்டன. இந்த ஏழு நாடுகளிற்கு மட்டும்தானா உலகம்? இதர நாடுகளுக்கு பூமி சொந்தமில்லையா?




என்ற கோபம் மற்றத் தேசங்களுக்கு உண்டு. எனினும் இது எவ்வளவு தூரம் நியாயமானது என்பதும் நீடித்த சிந்தனைக்குரியதாகும். உதாரணமாக ஒரு நாடு ஐரோப்பியக் கூட்ட மைவின் பாதுகாப்பு உடன்படிக்கையில் கையெழுத்திட்டு ஒன்றியத்துடன் இணையும் போதே அந்த நாட்டிற்கும் அணுப்பாதுகாப்புக் கிடைத்துவிடுகிறது. பிரான்சிடமும் இங்கிலாந் திடமும் உள்ள அணு ஆயுதப் பாதுகாப்பை இயல்பாக அவை ஏற்றுக்கொண்டுவிடுகின்றன என்பது அதன் பொருள். இதுபோலவேதான் நேட்டோ, வார்சோ அணியில் உள்ள நாடுக ளுக்குரிய பாதுகாப்பும் அமைகிறது. மேலும் அணுசக்தி கையில் இல்லாத யுகோஸ்லாவியா பிரிந்து உடைந்து போனதையும், இந்தோனேசி யாவின் பொருளாதாரம் சிதறி விழுந்தமையையும், அணுப்போர் அச்சுறுத்தலால் ஈராக் மீதான



இரண்டாவது போர் தடுக்கப்பட்டதையும் ஒப்பிட்டு நோக்கும் எந்தவொரு ஆட்சியாளரும் எதிர்காலம் பற்றிய உளவியல் அச்சத்தால் சூழப்படுவதும்; அதற்குப் பரிகாரமாக உலகம் கண்டுள்ள இறுதி ஆயுதத்தால் தம்மைப் பாதுகாக்க முயல்வதும் தவிர்க்க முடியாததாகிறது. எனவே தான் அடுத்த நூற்றாண்டின் மிகப்பெரிய பிரச்சினையாக அணு ஆயுத ஓட்டப் போட்டியே அமையப் போகிறதென்றார் ஆதர் சி. கிளாக்.

அணுகுண்டுப் போரானது இந்தியாவிற்கோ, பாகிஸ்தானுக்கோ உலகத்திற்கோ உகந்ததல்ல என்பது நேர்மையான பதில்தான். துப்பாக்கி



யால் பரிசோதனைக்காகச் சுட்டாலும் பழி தீர்க்கச் சுட்டாலும் விளைவு ஒன்றுதான். அதுபோலவே பரிசோதனைக்காக வெடித்தாலும், போருக்காக வெடித்தாலும் அணுகுண்டு பூமிமீது ஏற்படுத்தும் தாக்கம் ஒன்றுதான். யார் செய்தது சரி, யார் செய்தது தவறு என்பது சரியான வாதமல்ல. அணுகுண்டுப் பரிசோதனை ஒப்பந்தத்தில் இவ்விரு நாடுகளும் கையொப்பமிடுவதே சரியான செயல்



என்பதில் உலகில் உள்ள எவரிடமும் மாறுபட்ட கருத்து இருப்பதாகத் தெரியவில்லை. பிரபஞ்சத்தில் ஆங்காங்கு பல கிரகங்கள் வெடித்துச் சிதறுவதை அவ்வப்போது கேள்விப்படுகிறோம். அதுபோல பூமிக்கும் ஓர் நாள் குறிக்கப்படுவதை மனிதகுலம் தடுத்து நிறுத்தும்போது தான் இதுவரை மனிதன் கண்டுபிடித்த அறிவியலுக்கும் விஞ்ஞானத்திற்கும் உண்மையான வெற்றி கிடைக்கும். அணுசக்தி உபயோகத்திற்கு 100 டொலர் செலவழிக்கப்படுகிறதென்றால் அதில் 99.9 வீதம் போருக்கும் 0.1 வீதம் அமைதிக்காகவும் செலவாகிறது. என்று கவலைப்பட்டார் நோபல் பரிசு பெற்ற தமிழரான சேர். சி.வி.ராமன். இந்தக் குரல் மேலை நாடுகளுக்குரியதல்ல, தென்னாசியப் பிராந்தியத்திலிருந்தே தோன்றியதென்பதை யாரும் மறுத்தல் முடியாது. எனவே அணுப்போர் விவகாரத்தில் "இனியொரு விதி செய்வோம் அதை எந்நாளும் காப்போம்" என்ற நிலையை உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்வது அவசியமாகும்.

## மிரட்டல்

அது ஒரு தனியார் மருத்துவமனை. நர்சுகளும், கம்பவுண்டரும், ஊழியர்களும் சம்பள உயர்வு கேட்டு எவ்வளவோ போராடியும் சம்பளத்தை உயர்த்தாததால், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள்.

முதலில் அடையாள வேலை நிறுத்தம் செய்தார்கள். டாக்டர் கண்டுகொள்ளவே இல்லை.

உண்ணாவிரதம் இருந்து பார்த்தார்கள். டாக்டர் மசியவே இல்லை.

ஊர்வலம் போனார்கள், காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள்.

ஊஹூம், டாக்டர் அசரவில்லை.

பல பெரிய மனிதர்கள் , சமூக சேவகர்கள், அதிகாரிகளெல்லாம் பேசிப் பார்த்தும் பத்துப் பைசாகூட சம்பளம் அதிகம் தர முடியாது என்று கறாராக இருந்தார் டாக்டர்.

கடைசியில் கம்பவுண்டர் உள்ளே போனார்.

பத்தே நிமிஷத்தில் வெற்றிப் புன்னகையுடன் வெளியே வந்த கம்பவுண்டர் பெருமிதத்துடன் அறிவித்தார். டாக்டர் சம்பள உயர்வுக்கு சம்மதித்துவிட்டார். அவ்வளவுதான். எல்லாருக்கும் ஆச்சரியம் தாங்கவில்லை. என்னய்யா சொல்லி டாக்டரை மசியவச்சே?

கம்பவுண்டர் சொன்னார்-

சம்பளத்தை உயர்த்தலன்னா எதிர்லயே கிளினிக் ஆரம்பிச்சு, இதே ஆட்களை வேலைக்கு அமர்த்தி நானே டாக்டராகிடுவேன்னு- மிரட்டினேன்... ஆசாமி பயந்துவிட்டார்.

## ஜேர்மனியில் ..........

புதிய சங்கத்தில் உங்கள் அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்து கொள்ள முடியும்.

# NEW CO - OP
# புதிய சங்கம்



- இந்தியா, கிழக்கு ஆசியா நாட்டு உணவுப் பொருட்கள்,
- பெரியவர் சிறுமியருக்கான உடைகள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- இலக்கிய, இலக்கணப் புத்தகங்கள்
- தமிழ் அகராதி, தமிழ் ஜேர்மன் அகராதி
- தொலைபேசி அட்டைகள்

இவை தவிர,

- மலிவு விலையில் விமானப் பயணச் சீட்டுக்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

**ஒருமுறை விஜயம் செய்யுங்கள். தரமாக, மலிவாக நியாய விலையில் பெற்றிடலாம்.**







மங்கள கரமான விழாக்களுக்கு உணவு வகைகளும் செய்து கொடுக்கப்படும்

விரைவில் வீணை வகுப்பும் ஆரம்பிக்கப்பட உள்ளது.

**NEW CO- OP**

**Gathe 19, 42107 wuppertal, Germany**

**தொலைபேசி: 0202 - 455106**

# 'டிஜிற்றல்' தொழில் நுட்பத்தின் புதிய சாதனை

## இறந்துபோன பிரபல நடிகர்களை மறுபடியும் வெளித்திரைக்கு கொண்டுவருகிறது.


இருளைக் கிழித்து திரையில் சாகசம் புரியும் சினிமா இதுவரை எண்ணற்ற சாதனைகளை எட்டிப் பிடித்து விட்டது. இனிவரும் புதிய சினிமா டிஜிற்றல் தொழில் நுட்பத்தைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு திரைப்பட இரசிகர்களைப் பிரமிக்க வைக்கவுள்ளது. இறந்துபோன நடிகர்களும் நடிகைகளும் மறுபடியும் நிஜமான தோற்றத்துடன் நடிக்கும் காட்சிகளை அப்படியே திரைக்கும் கொண்டுவர இருக்கிறது புதிய டிஜிற்றல் தொழில் நுட்பம். இந்தப் புதிய தொழில் நுட்பம் திரைப்படத் துறையில் ஈடுபடுவோருக்கு கோடி கோடியாக வருமானத்தைக் கொட்டிக் கொடுக்க இருக்கிறது. அதேவேளை தயாரிப்புத் தொழிலை பல மில்லியன்களால் குறைத்துவிடவும் இது புதிய வழிகாட்டியாய் அமைகிறது.

**செலவை எப்படிக் குறைக்கலாம்?**

இங்கே டைற்றானிக் திரைப் படத்தின் ஓர் காட்சியைக் காண்கிறோம். சவுத்காம்ரன் துறைமுகத்திலிருந்து டைற்றானிக் புறப்படும் ஆரம்பக் காட்சியே இது. இக் காட்சியைப் படம் பிடிக்க



பிரமாண்டமான டைற்றானிக் படத்தில் அதிகமான டிஜிற்றல் தொழில் நுட்பம் கையாளப்பட்டுள்ளது. கப்பல் புறப்படும் காட்சியில் ஒரு சிலரே உண்மையானவர்கள் (அம்புக்குறி குறிக்கும் பகுதி). ஏனையோர் கணணியால் உருவாக்கப்பட்டோர்.


படம்.1


படம்.2

டைரக்டரான ஜேம்ஸ் கமரூன் டிஜிற்றல் தொழில் நுட்பத்தையே பாவித்திருந்தார். இங்கே காணப்படும் துறைமுகத்தில் பழைய காலத்து ஆடைகளுடன் தோன்றிக் கையசைக்கும் பெருந்தொகையான மனிதர்களில் ஒருசிலர் மட்டுமே உண்மையானவர்கள். முன்புறமாக அம்புக்குறி சுட்டிக் காடும் பகுதியில் இருப்பவர்களே நிஜ மனிதர்கள். மற்ற உருவங்கள் அனைத்தும் ஜேம்ஸ்கமரூனால் சக்தி வாய்ந்த கணணிமூலம் மூலம் சேர்த்துக் கொள்ளப்பட்ட வடிவங்களே. இதனால் பெருந்தொகை பணத்தை அவரால் மிகுதிப்படுத்திக் கொள்ள முடிந்தது.

உண்மையாகவே டைற்றானிக் பனிப்பாறையில் மோதி மூழ்கிய போது வெப்பம் பூஜ்ஜிய மட்டத்திற்கு கீழே இருந்தது. இந்தச் சூழ் நிலையில் கதைப்பவர்களின் வாயிலிருந்து புகை வெளியேறுவது இயல்பு. ஆனால் திரைப் படத்தில் வரும் டைற்றானிக் மூழ்கடிக்கப்பட்ட இடமோ குளிரானதல்ல. அச்சமயம் நடிப்போரின் வாயினால் புகைவருவது சாத்தியமில்லை. ஆனால் திரைப் படத்திலோ கதைப்போரின் வாயினால் புகைவருகிறது இதை செயற்கையாக ஏற்படுத்தியதே டிஜிற்றல் தொழில் நுட்பம்தான்.


**இறந்துபோன திரைப்பட நடிகர்களை எப்படி மறுபடியும் கொண்டுவருவது?**

தமிழ்த் திரையுலகில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் மறுபடியும் திரைக்கு வரமாட்டாரா என்ற ஏக்கம் பலருக்கு உண்டு. டிஜிற்றல் தொழில் நுட்பத்தால் அதை நிறைவேற்ற முடியும். உலக அழகி ஐஸ்வர்யாராயுடன் எங்க வீட்டுப் பிள்ளை காலத்து மக்கள் திலகத்தை நடிக்கவிடுவது இனி சிரமமான காரியமேயல்ல. முதலில் உயிருடனிருக்கும் நடிகரின் உடலை முப்பரிமாண டிஜிற்றல் தொழில் நுட்பம் மூலம் பிரதிசெய்து கொள்ள வேண்டும். லேசர் கதிர்கள் மேற்கண்ட நடிகரின் உடலின் மேடு பள்ளங்களை, உடலுறுப்புகளின் இடைத்


படம்.3

தூரங்களை மிகத் துல்லியமாகக் கணக்குப் பண்ணி பிம்பத்தை தெறிப்படையச் செய்து விடுகிறது. உடலை பல இலட்சம் புள்ளிகளைக் கொண்ட வலையாக்கமாகத் தயாரித்துக்கொண்டபின் ஒவ்வொரு புள்ளிகளையும் சரியான கணக்கீட்டின் மூலமாக அசைக்கும் போது நடிகர் இன்றியே பிம்பம் நடிக்க ஆரம்பித்துவிடுகிறது. இவ்விதம் உருவாக்கப்பட்ட வலைப் பின்னல் வடிவ உருவத்திற்கு நிறத்தைக்கொடுத்து, உடைகளை அணிவித்து அழகுபடுத்துவர். இம்முறை மூலம் மேற்கண்ட


படம்.4


படம்.5

படம்.1– 1968–ல் வெளியான படம் ஒன்றில் ஸ்ரீவ் மக்குயின் ஓடிச் சென்ற Ford Mustang வகைக் கார்.

படம்.2– 1998–ல் மக்குயின் ஓடிச்செல்லும் Ford Puma.

படம்.3– நடிகர் ரொம்ஹங்ஸ் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எப் கெனடியுடன் நடிப்பது போன்ற டிஜிற்றல் காட்சி.

படம்.4– ஜோன் வைன் உண்மையாக நடித்த படத்தின் காட்சி.

படம்.5– கணணியில் உருவாக்கிய ஜோன் வைன். பியர் ஒன்றின் விற்பனைக்கான விளம்பரப்படம்.

படம்.6– மார்லின் மன்றோவின் உருவம்.

படம்.7– வலையாக்கம் மூலம் புள்ளிகளை இணைத்து கணணியில் தயார்படுத்தும் மார்லின் மன்றோவின் உருவம்.

படம்.8– டிஜிற்றல் முறையில் தயாரிக்கப்பட்ட மார்லின்மன்றோ.

படம்.9– இவர் உண்மையாக உயிர் வாழ்பவர் அல்ல. நூறு வீதமும் டிஜிற்றல் முறையால் உருவாக்கப்பட்ட பெண்மணி. கியோக்கா இவரது பெயர். பல இலட்சம் இரசிகர்கள் இவருக்கு உண்டு.



படம்.6 படம்.7

நடிகரை இளைஞராகவோ முதியவராகவோ மாற்றிவிடவும் முடியும்.

இனி இவர்களுடன் காலஞ் சென்ற நடிகரை சேர்த்துக் காட்சியைக் கலவை பண்ணவேண்டும். ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள திரைப்படங்களில் காலஞ்சென்ற நடிகர் இருபரிமாணப் படங்களில் இருப்பரார். இவரை கணித முறைப் படி முப்பரிமாணமாக்கி சேர்த்துக் கொள்ள வேண்டும். இனி கதைக் கேற்ற அசைவுகளை உருவாக்கி திரைப்படத்தை நகர்த்திச் செல்ல வேண்டும். கோடிக்கணக்கான புள்ளிகளில் ஏற்படும் அசைவுகள் பாத்திரங்களை ஜீவனுள்ளதாக்கி விடும். அதேவேளை இந்த நடிகர் ஒரு காட்சியில் எப்படியாக நடிப்பார் என்பது முக்கிய கேள்வி யாகும். இதற்குரிய தகவல்களும் கணணிக்குக் கொடுத்தாக்கப்பட வேண்டும். ஆகவே அந்த நடிகர் ஏற்கனவே நடித்த மேலும் பல திரைப்படங்களை கணணிக்கு கொடுத்து அவரின் விஷேட அசைவுகளை அதில் சேர்க்க வேண்டும். அதன்பின் கணணி தான் உருவாக்கிய பாத்திரத்திற்கு ஏற்ற அசைவுகளை கொடுத்து நடிக்க வைக்கும். இசை, ஒலி, அரங்க அமைப்பு போன்றவை தனித்தனியாகச் சேர்க்கப்படும்.

இதுபோன்ற டிஜிற்றல் தொழில் நுட்பத்தைக் கையாண்டு சுவிற்சர் லாந்தில் ஓர் முயற்சி முன்னர் மேற்கொள்ளப்பட்டது. இவர்கள் புகழ்பெற்ற ஹொலிவூட் நடிகை மார்லின் மன்றோவை லேசர் தொழில் நுட்பத்தின் மூலம் உருவாக்க முயன்றார்கள். அருடைய முழு உருவத்தையும் ஒவ்வொரு மில்லிமீற்றராகப் புள்ளியிட்டு வலை வடிவமாக உருவாக்கி "ஸ்கான்" செய்த போது கணணியின் கொள்ளளவு அதற்கு இடம்கொடுக்கவில்லை. அதனால் அவருடைய முகத்தை மட்டுமே டிஜிற்றலில் உருவாக்கி அவரைப் போலவே தோற்றமுள்ள இன்னொருவரின் உடலில் அந்தத் தலையை இணைத்தார்கள். ஆனால் இது பூரணத்துவமானதல்ல. சில



படம்.8

மார்லின் மன்றோ படங்களைப் பார்த்த ஒரு இரசிகர் இந்த பிம்ப உருவத்தில் உள்ள சில பல வேறுபாடுகளை தெளிவாக அவதானிக்க முடியும்.

ஆனால் தற்போது பாவனைப் படுத்தப்படவுள்ள லேசர் தொழில் நுட்பமானது சுவிற்சர் லாந்து முறையைவிட முன்னேற்றகரமானது. மேலும் இப்போது விளம்பரங்களுக்கான குறும்படங்களே இத்தகைய டிஜிற்றல் தொழில் நுட்பத்தின் மூலம் வெளிவருகின்றன. உதாரணமாக 1968–ல் ஸ்ரீவ் மக்குயின் நடித்த புல்லற் என்ற திரைப்படத்தில் இவர் போட் முஸ்ரங் இரக காரை ஓட்டிச் சென்றார். இப்போது இதே காட்சியை டிஜிற்றல் முறை மூலம் புதிதாக தயாரித்துள்ளார்கள். 1980–இலேயே காலமான மக்குயின் 1998–ல் ஓர் விளம்பரப் படத்தில் வேகமாகக் காரோடி வருகிறார். கணணியில் காரை முற்றாக மாற்றி போட் பூமா இரகத்திலான புத்தம்புதிய காரை தயாரித்துக் கொடுக்கிறது மக்குயின் மறுபடியும் உயிர் பெற்று போட் பூமாவில் அலாதியாக வருகிறார். இது போலவே இப்போது வாழும் நடிகருடன் பழம்பெரும் நடிகரான ஜோன் வைன் பியருக்கான விளம்பரத்தில் நடிக்கிறார். இவை மட்டுமல்ல பிரபல அரசியல் தலைவர்களையெல்லாம் வெள்ளித்திரை நடிகர்களாக்கவிருக்கிறது இப்புதிய தொழில்நுட்பம்.

*பிரச்சினைகள்—*

இவ்விதம் தயாரிக்கும் புதிய படங்களில் காலஞ் சென்ற நடிகர்களின் முகங்களைப் பதிக்க சட்டரீதியாக இடமிருக்கிறதா என்பது முக்கிய கேள்வியாக உள்ளது. மேலும் இத் தொழில் நுட்பம் ஆரம்பமாகும்போது சில குறைபாடுகளைக்கொண்டிருப்பது இயல்பு ஆனால் இது மேலும் வளர்க்கப்பட வேண்டியுள்ளது. அத்தோடு தொழில்



படம்.9

நுட்பம் உண்மையை நூற்றுக்கு நூறுவீதம் பிரதிபண்ணுவதும் முடியாதகாரியமே. எனினும் இனி வரும் திரைப்படங்கள் எதிர்பாராத புதுமைகளோடு இன்னொரு படிக்கட்டில் கால்பதிக்கவிருப்பதை மட்டும் மறுக்கமுடியவில்லை.

## சிறுகதை

# சிதறிப்போகும் சித்திரங்கள்

புழுதியைக் கிளறிக் கொண்டு வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் "குளிர்அருவி" யைக் கண்டவுடன் அமைதியாகி ஓய்ந்து நின்றது.

அந்த சிறு நகரின் முக்கிய இடத்தில் குளிரருவி அமைந்திருந்தது. அதற்குப் பின்னால் சந்தை. சந்தை வாயிலில் சின்னப் பிள்ளையார் கோவில். எல்லாவற்றையும் கவனித்தபடி குந்தியிருந்தார் பிள்ளையார். நகர் பரபரப்பாயிருந்தது.

மோட்டார் சைக்கிளால் இறங்கிய காந்தன் முகத்திலிருந்த கண்ணாடியை பணி நீக்கி பொக்கற்றினுள் சிறைப்படுத்திக் கொண்டு உள்ளே சென்றான். பேருக்கேற்றால் போல் மிகவும் இதமாய் இருந்தது. அந்த நான்கு சுவருக்குள் ஓரம் தாண்டிருந்த அருவியில் தன் கொதித்த குடலை குளிர் தீர்த்துக்கொண்டான். வெளியேறி, மீண்டும் அந்த இயந்திரத்தை ஐந்து நிமிட முயற்சியின் பின் ஒருவாறு செயற்படுத்தினான்.

மோட்டார் சைக்கிள் உருள ஆரம்பிக்க ஒருவனது கை காந்தனைச் சுரண்டியது. திரும்பிப் பார்த்தான்..... சின்னப்பையன்.

"அண்ணா....."



என்றவாறுதன் கையை வயிற்றிலும் வாயிலும் மாறிமாறி வைத்தான். "எடு...கைய... வீட்டவாறியா.... சாப்பாடு தரலாம், உடுப்பு தரலாம், ஏன் பள்ளிக்கூடமும் போகலாம் வாறியாடா?" என்று காந்தன் வெருட்ட அவன் மௌனமானான். அவனது குடும்பப் பின்னணி காந்தனுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

மீண்டும் "என்னடா வாறியா...?" என்று கேட்க அவன் தலையைச் சொறிந்துவிட்டு இடத்தைவிட்டு நகர்ந்தான். அந்தப் பையன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த காந்தன் தனக்குள் ஏதோ செய்வதை உணர்ந்தான்.

அவனைப் பார்த்தால் இந்தத் தொழில் செய்பவனைப்போல் தெரியவில்லை. அவனதுஉடை அவ்வளவு அழுக்கானதாகவோ தலைமயிர் வளர்ந்து காடேறியாகவோ தென்படவில்லை.... அவனது முகத்தில் ஏதோ சோகம்.... ஒரு வசிகரம் இருக்கின்றது. அப்ப ஏன் இவன்?

"தம்பி இங்க வா" என்று கூப்பிட்டான்.

அழகிய சின்ன வேம்பு தன் கிளைகளை அகலப் பரப்பி "குளிரருவி" க்குச் செல்ல வசதியில்லாதவர்களை தன்னகத்தே கொண்டிருந்தது. அந்த மரத்தடியில் இருவரும் சென்றமர்ந்தனர்.

"தம்பி உனக்கு எத்தின வயசு.... படிக்கிற நேரத்தில ஏன் இப்படி" எண்டு பேச்சை ஆரம்பித்தான்.

காந்தனின் பேச்சைக் கேட்டவன் மெல்ல அண்ணார்ந்து வானத்தைப் பார்த்தான். திடீரென மேகம் கறுத்து மழைத்துளி

விழுவது போல் அந்தப் பிஞ்சின் முகம் கறுத்து– நெஞ்சு கனத்து அந்த நினைவில் கரைந்தது.

★★ ★★

பனைகளாலும், தென்னைகளாலும் சூழப்பட்டு அமைதியாகத் தூங்கிக் கிடந்தது நாவற்குழி எனும் சின்னக் கிராமம். கொஞ்சம் கடல், கொஞ்சம் வயல், நெஞ்சைக் கிள்ளும் அந்த இயற்கைக் காட்சி. இங்கேதான் சண்முகம் குடும்பம் அமைதியாக வாழ்ந்து வந்தது.

மனைவி சிவபாக்கியம் மூத்த மகன் ராஜி இளையவன் வேழன் இவர்களுடன் சண்முகம் இன்பமாக வாழ்க்கை நடத்தினான்.

இது இறைவனுக்குப் பிடிக்கவில்லையோ அல்லது சிங்கள தேசத்திற்குப் பிடிக்கவில்லையோ... இனவெறிப் படையினர் அப்பகுதியை ஆக்கிரமித்துப் படைமுகாமை நிறுவினர். அதன் பலன் சண்முகம் ஒரு காலை இழந்து படுக்கையில் வீழ்ந்தான். ஆம் வீழ்த்தப்பட்டான்.

அதனால் பத்தாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்த ராஜி குடும்பச் சுமையைத் தாங்கிக் கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. காலில்லாத தந்தை.... வீட்டின் நான்கு சுவர்களுக்குள் மட்டுமே அம்மா, அ...ஆ...இ..... அரிசியில் பழகிக் கொண்டிருக்கும் தம்பி, அனைவரையும் சுமக்க ராஜி விறகு சுமந்தான்.

இப்படியே எட்டு வருடங்கள் தொலைந்துபோயின. ராஜி எலும்பும் தோலுமாய் இளைத்தே விட்டான். ஆனாலும் வேழனை "ஸ்கொலஷிப்" சித்திபெற வைத்து விட்டான். சுமையிலும் அவனுக்கோர் திருப்தி.

இப்படி இருந்த போதுதான் அந்தக் கொடூரம் நிகழ்ந்தது. முழுத் தமிழினத்திற்கே நடந்த துயர். சிங்கள இனவெறியர் யாழ் மாவட்டத்தை ஆக்கிரமித்து சொத்துக்கள் சொந்தங்கள் எல்லாவற்றையும் அழித்து தமிழனை நிர்க்கதியாக்கி சொந்த இடங்களை விட்டுத் துரத்திவிட்டு...

உறவுகளை உடமைகளை இழந்த உள்ளம் உடைந்து காற்றால் கலைத்துவிடப்பட்ட முகில் கூட்டம்போல் திரள்திரளாக மக்கள் இடம்பெயர்ந்தனர். சொல்லில் அடங்காத அந்தக் கொடூர நிகழ்வுக்குச் சண்முகம் குடும்பமும் தப்பவில்லை.

தந்தையைக் கையால் தூக்கிக் கொண்டு, இன்னொரு கையில் அகப்பட்ட பொருட்கள். அதனோடு தாயையும் தம்பியையும் கூட்டிக்கொண்டு... மெல்ல இல்லை விரைவாகச் சென்றான் ராஜி.

எங்கும் சனத்திரள்... ஒரு அடி எடுத்து வைக்க ஒருமணி நேரம் எடுத்தது. துயருடன் சென்று கொண்டிருந்த அந்த நிமிடம் "இஸ்...... இஸ்......" என்ற சத்தம் எல்லோரையும் பதட்டத்துடன்



அண்ணார்ந்துபார்க்க வைத்தது.

"ஐயோ.....கிபீர்.... கிபீர்...." என்று யாரோ கத்தி முடிக்க முன்..... "டும்...டும்.... டும்..." என்ற சத்தம் வானில் எழுந்தது. எங்கும் புகை மண்டலம்.... அதனோடு சேர்ந்து "என்ர ஐயோ... அம்மா... ஆ..... என்ரபிள்ளை..... எங்க" என்ற சத்தங்களும் எழும்பியது! எல்லோருடைய வாய்களும் கத்திக் குழறின.

ஐயோ என்ர பிள்ளை.... என்ர ராசா.... தலையில் கையை வைத்து சிவபாக்கியம் கத்திக் குழற... தவறுப்பட்ட வேழன் எப்படியோ ஓடி வந்து சேர அந்தப் பிஞ்சின் கண்ணில் தென்பட்ட கொடூரக் காட்சி – ராஜியும், தந்தையும் இறைச்சிக் குவியலாய்....

திடீரென மீண்டும் அந்தச் சத்தம்... "இஸ்...ஸ்..." அம்மா.... எழும்புங்கோ... ஓடி வாங்கோ வாறன் வாறன்.... என்ற சத்தத்தோடு ஓடி வந்தவர்கள்தான்.... கடலேறி வன்னிக்கும் வந்துவிட்டனர். சிவபாக்கியம் அழுதழுது வருத்தக்காறி ஆகிவிட்டாள். மூன்று மாதங்கள் பாடசாலை முகாமில் இருந்துவிட்டு அடுத்த இடப்பெயர்வுடன் வன்னியின் இதயத்திற்கு வந்து அயலவர் உதவியுடன் கொட்டில் போட்டு உண்டும்....... உண்ணாமலும் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது.

★★ ★★

"தம்பி....தம்பி... டேய்" காந்தன் தோளைக் குலுக்க திடுக்குற்றவன் கண்கள் கலங்கி இருந்தது. நினைவில் கலந்ததை காந்தனிடம் சொல்லி முடித்தான். காந்தனால் அதை ஜீரணிக்க முடியவில்லை. தம்பி நீ ஏன் எல்லாரிட்டயும் கை நீட்டுற.... ஒரு கடையில போய் நிக்கலாம்தானே என்ற காந்தனின் பேச்சுக்கு... "எல்லாக் கடயிலயும் கேட்டனான், நிக்கட்டாம் மாதம் முடியத்தான் சம்பளம் தருவினம்.... அப்ப ஒவ்வொரு நாளும் அம்மா சாப்பிடுறது..." என்ற கேள்வியுடன் சொல்லிமுடித்தான்.'சரி என்னோட வா வீட்ட சாப்பிடுவம்...' என்று காந்தன் எழ எத்தனிக்க...

"அண்ண அம்மாவுக்குப் பத்து நாளா வருத்தம் ஆஸ்பத்திரியில

இருக்கிறா. அங்க மருந்து இல்லையாம். பிரைவேற்றில வாங்கி வரட்டாம். எல்லாப் பார்மஸியிலயும் கும்பிட்டுக் கேட்டேன். எல்லாரும் பேசி அனுப்பிப் போட்டினம்.

'அதுதான் விடிய இருந்து எல்லாரிட்டயும் கை நீட்டி ஒவ்வொரு ரூபாவாய் சேர்த்துக் கொண்டிருக்கிறன்' என்று கண்ணீருடன் கூறினான் வேழன்.

'காந்தனால் பேசமுடியவில்லை. அவனைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. தனது பையினுள் இருந்த நூறு ரூபாவை எடுத்து அவனது கையில் திணித்தான். 'இதக் கொண்டுபோய் அம்மாவுக்கு மருந்து வேண்டிக்குடு போ' என்று சொன்னதும் வேழன் நன்றி கூறிவிட்டு தாயைக்காண ஓடிப் போனான்.

'கீக்....தம்...தடார்' என்ற பெரும் சத்தத்துடன் வேன் ஒன்று மரத்தோடு மோதி நின்றது. காந்தன் திடுக்கிட்டுத் திரும்பினான்.... 'டிக் டிக் டிக்' இதயம் சற்று வேகமாக அடித்துக் கொண்டது... 'அ...ம்...மா' என்ற அலறல். சனக்கூட்டம் கூடிவிட்டது. காந்தன் செய்வதறியாது அவ்விடத்திற்கு ஓடினான்.

அந்தக் காட்சியை அவனால் நம்ப முடியவில்லை. வேழன் இரத்த வெள்ளத்தில் கிடந்தான் நூறு ரூபா நோட்டு காற்றோடு சுழன்று சுழன்று சென்றது. 'சின்னப்பெடியன் இப்பிடியா தலைதெறிக்க ஓடிவாறது...' என்று சனத்தோடு நின்ற ஒருவர் சொன்னார்.

காந்தன் அழுதேவிட்டான்.. அவனது நினைவில்.... முகம் தெரியா வேழனின் தாய் வந்து போனாள்.

முற்றும்.


# வேடிக்கையான கார் கழுவும் நிலையம்!



உலகின் மிக விநோதமான கார் கழுவும் நிலையம் ஒன்று கலிபோர்ணியாவில் உள்ள மரீனா உலகப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ளது. உல்லாசப் பயணிகளைக் கவருவதற்காக இப்படியொரு ஏற்பாடு.



4500 கிலோ எடையுள்ள யூடி என்ற ஆபிரிக்க யானை 30 லீட்டர் தண்ணீரை ஒரே தரத்தில் விசிறி கார்களைக் கழுவுகிறது. அதே நேரம் குப்பைகளையும் எடுத்துவிடுகிறது. அதனுடைய தோழனான முள்ளம்பன்றி டயர்களின் காற்றை அளவெடுக்க மூடிகளைத் திறந்துவிடுகிறது. யானையாருக்கு ஒரு கரும்புத்துண்டு தான், காரைபளபளப்பாக்கிவிடுகிறார்.



# உலகத்தின் அறிவுகூடிய உயிரினங்கள்

மனிதர்களைத் துப்பறிவது போலவே மனிதர் அல்லாத இதர உயிரினங்களைத் துப்பறியும் பணியில் நீண்டகால மாகவே பல நாடுகளும், ஸ்தாபனங்களும் ஈடுபட்டு வருவது அனைவரும் அறிந்ததே. இப்பொழுது பூமியில் நிலை கொண்டுள்ள உயிரினங்கள் இயற்கையின் தாக்கங்களை, வென்று அல்லது அதற்கு ஈடுகொடுத்து வாழ்ந்து வருபன்வே. விலங்குகள், ஊர்வன, பறவைகள் போன்றவற்றிடமிருந்து அவதானித்துக் கொண்ட விடயங்களிருந்தே மனிதன் பல்வேறுபட்ட நவீன கருவிகளைத் தயாரித்துக் கொண்டிருக்கிறான். விலங்குகளின் பல்வேறு திறமைகளை அவதானித்த துப்பறிவாளர் சேகரித்த தகவல்களின்படி இவற்றை அறிவு கூடிய உயிரினங்கள் என்று கூறுகிறார்கள்.

**உலகின் அறிவு கூடிய விலங்கு சிம்பஞ்சிக் குரங்கு!**

மற்ற விலங்குகளுடன் ஒப்பிட்டால் நிறைந்த அவதானமும்,



அறிவும் கூடியது சிம்பஞ்சிக் குரங்கே. இயற்கையின் சகல நிகழ்வுகளுடனும் தன்னை இணைத்துக் கொண்டு செயற்படும் திறமை வாய்ந்வை. ஏழு வருடங்களில் 200 பல்வேறுபட்ட அடையாளங்களைப் புரிந்து கொள்ளக்கூடியவை. பூனை என்ற சொல்லைக் கேட்டால் உடனே பூனையின் படத்தைக் காட்டிவிடும். சுமார் 600 வசனங்களைப் புரிந்து கொள்ளக்கூடியவையாக உள்ளன. ஒரு நாய்க்கு ஊசி போடும்படி சொன்னால் உடனே ஊசியை எடுத்து சரியாகப் போட்டு விடுகின்றன. 2 வயதுடைய மனிதக் குழந்தையை விட புரிந்து கொள்வதில் இவை கெட்டித்தனம் உடையவை. சமூக வாழ்வைப் புரிந்து நடக்கும். சிம்பஞ்சிக் குரங்கே அறிவில் கூடிய தாவும் விலங்காக உள்ளது. இதனுடைய மூளையின் அளவு மனிதர்களுடையதைவிட மூன்று மடங்கு குறைவானது அதனால் இவை பயிலக்கூடிய அளவுக்கு ஓர் எல்லையுண்டு. அளவிற்கு மிஞ்சினால் குழம்பிவிடக் கூடியவை.

**உலகின் மிக அறிவுகூடிய பறவை பஞ்சவர்ணக் கிளி**

பறவைகளில் மிகக் கெட்டித்தனமானவை பஞ்சவர்ணக் கிளிகளே. இவைகளிலும் அமேசன் பஞ்சவர்ணக்கிளி, சாம்பல் கிளி ஆகிய இனங்கள் மிகவும் புத்தி சாலிகளாகும். ஆங்கிலச் சொற்களையோ அல்லது உரையாடல்களையோ காது கொடுத்துக் கேட்கின்றன. அதன்பின் அவற்றை அப்படியே திருப்பிக் கூறிவிடுகின்றன. 100 விதமான சொற்களை அவை எளிமையாகப் பேசி விடுகின்றன. நிறங்கள், பொருட்கள், எண்ணிக்கைகள் போன்றவற்றை கூறிவிடுவன. ஆங்கிலச் சொற்களை மட்டுமல்ல தமிழை மட்டுமல்ல அரபிச் சொற்களையும் சிறப்பாக உச்சரித்து விடுகின்றன. ஒரு கழிப் பேனையையும், புல்லை



யும் கொடுத்தால் அவற்றின் வேறுபாடு உணர்ந்து பெயர் சொல்லுகின்றன. வயல்களில் விளையும் தானியங்கள் பழங்கள் போன்றவற்றை வேறுபாடு உணர்ந்து தன் தேவைக்கேற்ப தேடிச்செல்லும் என்று எங்கே தாம் பிறந்தோம் என்பதைக்கூட இவை மறக்காது வைத்திருக்கும். எனினும் சிறிய மூளையாக இருப்பதால் மேலும் வீச்சுடன் செயலாற்ற முடியாத நிலையில் உள்ளது.

**உலகின் அறிவுகூடிய கடல் உயிர் எட்டுக்கால் மீன் (Cutie Fish)**

கணவாய் வடிவிலமைந்த எட்டுக்கால் மீன் நிறைந்த அறிவுள்ள கடல்வாழ் உயிரினமாக உள்ளது. இது ஞாபகசக்தி கூடியது, கருவிகளைப் பயன்படுத்திப் பார்க்க வல்லது. பிரச்சினைகள் தோன்றினால் அதிலிருந்து கச்சிதமாகத் தன்னை விடுவித்தும் கொள்கிறது. இது புதினங்களை அறிய ஆவல் கொண்டு தனது கால்களால்



துழாவிப் பார்க்கும் இயல்புடையது. உதாரணமாக இங்கே ஒரு கண்ணாடிக் கிளாசில் இறால் அடைக்கப்பட்டுள்ளது இதை ஆராய்ந்து அறிந்து ஒரு காலால் மூடியைத் திறந்து இறாலைப் பிடித்து தின்றுவிடும். இதுபோல எங்காவது அடைத்து வைத்தால் புது வழிகண்டு பிடித்து தப்பியும் சென்றுவிடும். கணிதத்தில் வரையக்கூடிய தோற்றங்களையெல்லாம் அடையாளம் காணவல்லது. இருப்பிடத்தைத் தேடிக் கண்டு பிடிப்பது, மற்ற கடல்வாழ் உயிரினங்களிடமிருந்து தன்னைக் காப்பது போன்ற நடவடிக்கைகளில் மிகுந்த அறிவாளியாக உள்ளது. இவவிதம் இது அறிவு பெற்றிருக்கக் காரணம் இதன் மூளை பெரிதாக இருப்பதேயாகும். ஆனால் இதனிடமும் ஒரு குறைபாடு உள்ளது. இது தனது இனத்தவருடனேயே சேர்ந்து வாழப்பழகவில்லை. தன் இன இளைய மீன்களையே இது கணக்கெடுப்பதில்லை.

**உலகின் அதிகூடிய அறிவுள்ள இலையான் தேனீக்கள்**

தேனீக்கள் தமக்குள் பாசையைக் கையாழ்வதில் மிகுந்த கெட்டித்தனமுடையவை. தமக்குள்ளான பரிபாசையை நடனமிடுதல், வாசனைவீசுதல் போன்றவற்றால் தெரிவிக்கின்றன. சிறந்த தேன் உள்ள இடமானாலும் அவை நிற்கும் நேரம் 45 செக்கன்களேயாகும். தமது பரிபாசையால் ஏறத்தாழ ஒரு இலட்சம் தேனீக்கள் ஒரு குழப்பமுமின்றி ஒழுங்காகக் கடமையாற்றுகின்றன. இதுவே உலகில்



அவற்றின் அறிவுத்திறமை. எனினும் இவற்றின் மூளையின் அளவு ஒரு கன மில்லிமீற்றர் மட்டுமே இதனால் பல மில்லியன் மூளையின் செல்கள் பற்றாக்குறையாகவே உள்ளன.

# வெற்று 'டின்' களில் புதிய படகு!

சுமார் 4000 வெற்றுகோலா, பியர் டின்களை இணைத்து இப் படகு தயாரிக்கப்பட்டுள்ளது. விளம்பரத்திற்காக தயாரிக்கப்பட்ட மேற்கண்ட படகிற்கான 'டின்'கள் அனைத்தும் பிளாஸ்டிக் இழைகளால் இணைக்கப்பட்டுள்ளது. தெற்கு டக்கோரா-வைச் சேர்ந்த மிஸ் டெனிலா என்பவருக்காக விளம்பரகாரரான ஹரிசன் என்பவர் இதைத் தயாரித்துள்ளார். 130 கிலோ எடையுள்ள ஒருவர் இதில் பயணம் செய்யலாம். கழிவுப் பொருட்களைப் பாவனைப் படுத்த இப்படியொரு உத்தி.



# சமூக அறிவியல் நோக்கில் நாட்டுப் புறப் பெண்கள்

*"கூடினமே கூடினமே*
*கூட்டு வண்டிக் காளைபோல*
*விட்டுப் பிரிஞ்சமையா*
*ஒத்த வண்டிக் காளைபோல"*

சமூக அறிவியல் நாட்டுப்புறப் பெண்கள் வழக்காறுகள் பற்றிய ஆய்வு இன்று தனிக்கவனம் பெற்று வருகிறது. மானிடவியல், சமூகவியல், உளவியல், வரலாறு, மொழியியல் முதலான துறை சார்ந்த ஆராய்ச்சிகளில் நாட்டுப்புற பெண்கள் என பல கோணங்களில் தொகுத்து வகைப்படுத்தி ஒழுங்கு செய்யும் முயற்சி. சமூக அறிவியல் அடிப்படையில் இந்த ஆய்வுக் கட்டுரையில் பார்ப்போம்.

## பூப்புச் சடங்கு:

பெண்கள் பூப்பு எய்திய நாளின் நட்சத்திரத்தைக் குறித்து வைப்பார்கள். வீட்டுக்குள்ளேயே ஓர் ஒதுக்கிடத்தில் சோளத்தட்டைக் குச்சியினால் ஒரு மறைப்பினை அமைப்பார்கள். தாய் மாமன் முதன் முதலில் ஒரு தட்டைக் குச்சியை எடுத்துக் கொடுப்பார். பின்னர் வேறு யாரேனும் அம்மறைப்பினை அமைக்கலாம், முற்காலத்தில் பெண்ணின் மடியில் தேங்காய், பழம் வைத்து தாய்மாமன் பூப்பெய்திய பெண்ணைத் தூக்கிச் சென்று குடிசையில் விடவேண்டும். இப்பழக்கம் இப்போது நடைமுறையில் இல்லை.

ஒதுக்கப்பட்ட மறைவிடத்தில் பூப்பெய்திய பெண் 15 நாட்கள் இருக்க வேண்டும். அப்போது கிராமத்திலுள்ள பெண்சலவைத் தொழிலாளி தினமும் உடுத்துவதற்குப் புடவை கொடுக்க வேண்டும். ருது சமயத்தில் பெண் உடுத்தியிருந்த புடவை அத்தொழிலாளிக்கே உரியது. இப்பதினைந்து நாட்களிலும் பெண்ணின் மாமன்,



மைத்துனர் நல்ல உணவு அளிப்பார்கள்.

16–ம் நாள் நீராட்டிய பின் பெண்ணை வீட்டுக்குள் அழைப்பார்கள். மாமன் மைத்துனர் சீர் (பாத்திரம், துணி, நகை) கொண்டு வருவர். அவர்கள் கொட்டு முழக்கோடு ஊரைச் சுற்றி வந்து வீட்டுக்கு வருவர். தாய் மாமன் பெண்ணிற்குப் புதிய புடவை அளித்து, மாலை போடுவார் அடுத்து 'அற்றி இறக்கும்' சடங்கு நடைபெறும். பெண்ணை அலங்கரித்துக் கோலமிட்ட இடத்தில் மணைமேல் கிழக்கு நோக்கி அமர்த்துவர் , இரண்டு பெண்டிர் பெண்ணின் முன்னும் பின்னுமாக நிற்பர். தேங்காய் வைக்கப்பட்ட நீர் நிரம்பிய செம்பு, பிட்டு, அரிசி மாவினால் செய்த அடை, முறத்தில் வைத்த வேப்பிலை ஆகிய வகைகளைப் பெண்டிர் இருவரும் பூப்பெய்திய பெண்ணின் தோளிலிருந்து முழந்தாள் வரையில் மூன்று முறை ஏற்றி இறக்குவர். சடங்குகள் இரவில் நடக்கும். தாய் மாமனே முதன் முதலில் சீர் வரிசை செய்வதற்கு உரியவர்.

## கொத்தடிமைப் பெண்கள்:

கொத்தடிமைப் பெண்களை பற்றிய தர்ஸ்டன் குறிப்புகள். இவர்கள் இனப் பெண்கள் பத்தினி பிரிவைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுவது வியப்பிற்குரியதாகவே உள்ளது. அதாவது அப்பெண்கள் தனித்த முக அழகும் உடற் கட்டும் வாய்க்கப்பட்டிருப்பதோடு நல்ல நடத்தையும் உடையவர்களாக உள்ளனர். கொத்தடிமையினர் பெரும் எண்ணிக்கை



உடையவர்களாக வாழ்கின்றபரம குடியைச் சார்ந்துள்ள பகுதிகளில் சமீன்தார்களும் செல்வம் மிக்க வர்களும் இச்சாதிப் பெண்க ளோடு உறவு கொள்வதில் ஆர்வம் மிகுந்தவர்களாக உள்ளனர் என் பது எல்லோரும் அறிந்த ஒன்றே.

கொத்தடிமைப் பெண்ணும் சோளக்கதிரும் கூடப் பருவம் வரும்போது அழகாகவே இருப்பர் என்ற தமிழ்ப்பழமொழியும் உள் ளது. நெறிமுறைப்படுத்தப்படாத சக்தி வழிபாடு செய்பவர்கள் அதற்காக இச்சாதியைச் சேர்ந்த பெண்களையே தேர்ந்தெடுக்கின் றனர்.

## கொத்தடிமைப் பெண்ணும் பண்ணையாரும்:

சேலம் மாவட்டத்திலுள்ள பாவை மலையிலும் அதன் சுற்றுப் புறப் பகுதிகளிலும் வாழும் மலை வாழ் மக்களிடையே வழங்கி வரும் சிறிய கதைப் பாடல் "கொத்தடிமைப் பெண்ணும் பண் ணையாரும் என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது. பாடல் கதை வருமாறு.

தன் தோட்டத்தில் பணிபுரியும் இளைஞனின் இளம் மனைவி மீது கட்டுக்கடங்காத காதல் கொள்கி றார் பண்ணையார் கவுண்டர். சந்தைக்குப் போகும்போது கூட ஏதாவது காரணங்கூறி அவளைத் தன்னுடன் அழைத்துச் செல்வார். நிலத்தில் அவள் வேலை செய்தா லும் பரிவு காட்டி வேலை செய்ய வேண்டாம் என்று கூறிவிடுவார். சந்தைக்குப் போகும் போதெல் லாம் அவள் எவ்வளவுதான் மறுத்தாலும் தானிய மூட்டை களை அவள் குடிசையில் தள்ளி விட்டுச் செல்வார். இப்படியெல் லாம் செய்தும்கூட அவள் அவரு டைய இச்சைக்கு இணங்க வில்லை. இதனைக் கதைப்பாடல் பின்வருமாறு கூறுகிறது.

**பண்ணையார்:–**

எடுத்து நெல்லைப் போடு புள்ள எத்தனை மூட்டை வேணும் புள்ளே

**கொத்தடிமைப்பெண்:–** நானு கையிலே தீண்டமாட்டேன்– சாமி

நல்ல பாம்பு தீண்டிவிடும்

**பண்ணையார்:–** நானே எடுத்துப் போடுறேனே – நல்ல

நெல்லு மூட்டை ரெண்டு

இப்ப என்ன சொல்லு புள்ளே

எனக்கு மோகம் தீருபுள்ள

**கொத்தடிமைப்பெண்:–** இன்னும் எத்தனை கொடுத்தாலுமே சாமி

இந்த ஒன்னுக்கு எணங்கமாட் டேன்.



இதனால் மனம் வெறுத்த பண்ணையார் தன் வண்டிக்குத் தீ வைத்து அதில் விழுந்து பொசுக் குகிறார். செய்தி அறிந்த கொத்தடி மைப்பெண் பண்ணாடி வெந்து சாவதை கண்டு வேதனைப்படு கிறாள். பண்ணாடிச்சி அவளிடம் வந்து "உன் வீட்டில் என் கவுண்டர் போட்ட மூட்டைகளை உடனே வந்து எடுத்துக் கொடு "என்று கேட்க அவள்

கவுண்டரு நெருப்பில வேகு ராரு சாமி

கண்டபடி பேசலாமா?

எதையும் நானு தொடலை சாமி– போயி

எடுத்துக்குங்கோ எல்லாத்தையும் என்று கூறுகிறாள்.

இத்துடன் கதை முடிகிறது.

கொத்தடிமைப் பெண்களின் பண்பு நிலை குறித்து கொத்தடி மையரிடமும் பிற சாதியினரிடமும் மாறுபட்ட கருத்து காணப்படுகிறது.

பிற சாதியினர் கொத்தடிமைப் பெண்களின் அழகு பற்றிக் கூறும் போது

சாமக் கருது வெளைஞ்சா தெரியும்

கொத்தடிமைப் பொண்ணு சமஞ்சா தெரியும்

என்ற பழமொழியைக் கூறுகின் றனர். பூப்படைந்த கொத்தடி மைப்பெண் மிக அழகாக இருப் பாள் என்ற பொருளிலமைந்த இப் பழமொழி சிற்சில மாற்றங்களு டன் தமிழகத்தின் தென்மாவட் டங்களில் பரவலாக வழங் கப்படுவதையும் அறிய முடி கிறது. செவப்பா, வெய்யலி லையும் கருக்காத செவப்பு என்பன போன்ற பேச்சு வழக்குகளும் காணப்படு கின்றன. இவை இந்தப் பெண்களின் அழகை சுட் டிக்காட்டக்கூடிய வழக் காறுகள் அவர்களின் பண்பு குறித்து கூறும்போது இப் பெண்ணின் புருஷன் புடிச்சா கால காலத்துக்கு விடமாட் டா என்று கூறுகின்றனர். 'கட்டிய புருஷன் மீது அவ் வளவு ஈடுபாட்டுடனும் விசு வாசமாகவும் இருப்பர்' என்று இதற்கு விளக்கம் தரப்பட்டது. அவர்கள் வீட்டில் எளிதாகத் தீரமாட்டார்கள். (தீர்த்தல்– மண விலக்கு செய்தல்) என்ற கருத்தும் பரவலாகக் காணப்பட்டது. இது பொதுவாக அவர்களைக் குறித் தாலும் மறைமுகமாக இந்தப் பெண்களையே குறிப்பதை அவர் களுடன் பேசிப்பார்த்த போது அறிந்து கொள்ள முடிந்தது.

கொத்தடிமை ஆண்கள் தங்கள் சாதிப் பெண்களைப் பற்றிக் கூறும்போது அவர்கள் அழகான வர்கள் என்பதை ஒப்புக் கொண் டனர். ஆனால் தங்கள் பெண்க ளின் குண நலன்களை உயர்வாகக் கூறவில்லை தங்கள் பெண்கள் வேறு சாதியில் மணந்து கொண்டி ருந்தாலும் "எத்தனையோ பேர் அத்துக்கிட்டு (மணவிலக்கு செய்து கொண்டு) போவதுண்டு" என்று கூறினர். கலப்பு மணம் ஆதரிக்

கப்படும் இந்நாளையில் இந்த ஆண் வேறு சாதிப் பெண்ணை மணந்து கொண்டதற்கு ஒரே ஒரு சான்றையே இவர்களால் தர முடிந்தது. ஆனால் இந்தப் பெண்கள் மேல்சாதி ஆண்களை மணந்து கொண்டுள்ளமைக்குப் பல சான்றுகளைக் கூறினர். இன்றும் இந்தப் பெண்களோடு உறவு கொள்வதை மேல் சாதியினர் விரும்பும் போக்கு மிகுதியாக உள்ளதையே இச்சான்றுகள் தெளிவு படுத்துகின்றன. இந்தப் பெண்கள் மேல்சாதி ஆண்களை மணந்து கொள்வதை கொத்தடிமை ஆண்கள் ஆதரிக்கவில்லை. இதே நேரத்தில் அதனைத் தடுத்து நிறுத்தக்கூடிய பொருளாதார பலமோ ஆள் பலமோ தங்களிடம் இல்லை என்று அவர்கள் வருத்தத்துடன் கூறுகின்றனர்.

## மனப் போராட்டம்:

தன்னினும் வயதில் மிகவும் மூத்த கிழவனை இரண்டாந்தரமாக மணந்து கொண்ட ஒருத்தி தன் பாலுணர்வு நிறைவு பெறாமையால் இளமைக் கற்பனைக்கேற்ற அன்பு, இன்பவாழ்வு அமையப் பெறாத காரணத்தால் ஏமாற்றம் உற்றுப் பிற ஆடவனை விரும்புகின்றாள். வெளியானைத் தேடுகின்ற சமூகக் குடும்பச் சிக்கல்கள் காரணமாகத் தன் மூத்தாள் மகனையே விரும்புகின்றாள்; அவனோ தாய் முறை என்று மறுக்கின்றான்; இதனால் மன முறிவு தோன்றத்தான் இறப்பதாகப் புலம்புகின்றாள்; தன் இழப்புக்கு ஈடு செய்யப் பிறனை நாடுவதும் தான் மேற்கொண்ட செயலுக்குக் காரணம், நீதி கற்பிப்பதும் இப்பாடலில் காணலாம், பெண்ணின் புலம்பல்:

"அப்பா நான் ஒன்ன
பத்துமாசம் சொமக்கவில்லை—
ஒன்ன நான்
பாலூட்டி வளத்த தாயுமல்ல
காமப் பித்து தடுமாறிவிட்டால்
சத்தியமா நீ வாராவிட்டால்
பாரும் பழிநேரும்

மூத்தாள் மகன் மறுப்பு:—

"அம்மா இந்த
அற்பமான காரியத்தில்
எப்படி மனந்
துணிவேன்
நல்லும் பதில் சொல்லும் அம்மா
நல்லும் பதில் சொல்லும் அம்மா"

ஒத்துணர்வுகள் வலுவடைந்து அதனால் ஊக்கமூட்டப்பட்ட நடத்தைகள் தான் செல்லும் வழிகளில் தடைகள் அடைக்கப்பட்டிருப்பதைக் காணுகின்றன, இதனால் அவ்வுயிர் மணமுறிவும் மனப்போராட்டமும் கொள்கின்றது.

## மீனவப் பெண்:

கடலில் மீன் பிடிக்கச் சென்ற தன் கணவன் வீடு திரும்பாததால் மனைவி வருத்துவதைப் பாடலொன்று குறிப்பிடுகிறது.




எல்லோரும் போன வண்டி
கல்லு வரும் நெல்லு வரும்
என் புருஷன் போன வண்டி
திரும்பிவரக் காண இல்லே.

தன் மனைவியை நினைத்து மீனவர் ஒருவர் பாடுகிறார்.

கரும்பொத்த தேன்மொழியாள்
கறிசமைக்க வேணுமின்னா
பாவைக் கொழுந்தாலே
பல கறியும் அவள் சமைத்தாள்
எண்ணி கறிகள் வைப்பாள்
ஈக்கி கொண்டு நெய் சொறிந்தாள்
ஒண்ணும் பயணமின்னு
ஊட்டினாலோ கள்வேனுக்கு.

மீன் விற்கும் பெண்கள் இராஜாக்கமங்கலம் என்னும் கடற்கரை கிராமத்திலுள்ள அத்திக்கடையில் பாடிக் கொண்டே மீன் விற்பதை அறுபது ஆண்டுகளுக்கு முன் தான் கேட்டதாக அவ்வூரைச் சார்ந்த 74 வயதான பெரியவர் ஒருவர் குறிப்பிட்டார். தூத்தூர், வள்ளவிளை சின்னத்துறை, இறமன்துறை, பூத்துறை ஆகிய கிராமங்களில் வாழும் மீனவர் பெண்கள் காஞ்ஞாம்புறம் நித்திரவிளை களியக்காவிளை போன்ற ஊர்களுக்கு மீனைக் கொண்டு சென்று விற்று வருகின்றனர். பல கிராமங்களைச் சார்ந்த மீனவப் பெண்



## சிலந்திகள்

கறுப்பு நிறத்தில் உள்ள பெண் சிலந்திகளுக்கு விதவைச் சிலந்திகள் என்றுதான் பெயர். காரணம், இணை சேர்ந்து முடிந்தவுடன் ஆண் சிலந்தியை பெண் சிலந்திகள் கொன்றுவிடுகின்றன. சில பெண் சிலந்திகள் இந்த வகையில் தினசரி 25 ஆண் சிலந்திகளைக் கொல்வதும் உண்டு.

கள் ஒரே ஊர்ச் சந்தைக்கு மீன் விற்கச் செல்லும் போது பாட்டுப்பாடி அதனை விற்கின்றனர்

## அவ்வை நோன்பு:

அவ்வை நோன்பு பெண்கள் மட்டுமே தங்களுக்குள் எடுக்கின்ற விரதம் இதை அவ்வையார் விரதம் அவ்வையாமைகள் நோன்பு என்றும் குறிப்பிடுகிறார்கள். கழுகு மலைப் பகுதியில் இதனை ஈஸ்வரியம்மன் விரதம் எனக் குறிப்பிடுகிறார்கள். இந்த நோன்பு சிறப்பாக ஆடி, தை, மாதங்களில் எடுக்கப்படுகிறது. மாசி மாதத்திலும் எடுப்பதுண்டு.

பெண்கள் மட்டும் பங்கு கொண்டு கொண்டாடுகிற நோன்பு, ஔவை நோன்பு இது மிகவும் தொன்மையானது, ஆனால் மனித சமூக வளர்ச்சிப் போக்கில் மாறுகிற சிந்தனைகளின் தாக்கம், அந்த நோன்பின் சடங்குகளிலும் சடங்குகள் தோன்றியது பற்றிய மக்கள் நம்பிக்கையை வெளியிடுகிற புனை கதைகளிலும் காணப்படுகிறது

செவ்வாய்க் கிழமை இரவுகளிலும் இந்த நோன்பு எடுக்கிறார்கள். பொதுவாகப் பத்து மணிக்குமேல் ஆரம்பித்துக் காலை நான்கு ஐந்து மணிவரை நடக்கிறது. பல பெண்கள் சேர்ந்து கூட்டாக எடுக்கிறார்கள். விரதம் எடுப்பவர் எண்ணிக்கை ஒற்றைப் படையாக வரும்படி சேர்ந்து எடுப்பார்களாம்.

நிர்வாண விரதம், பொதுவாக இந்த விரதம் பற்றிப் பரவலாக ஆண்களிடம் இருக்கும் நம்பிக்கை, விரதத்தின் போது பெண்கள் ஆடைகளின்றி இருப்பார்கள் என்பதாகும் பெரும்பான்மையான இடங்களில் விசாரித்ததில் அது பொய் என்றே மறுக்கிறார்கள். ஒரு இடத்தில் 'முன்னே எப்படியோ, இப்ப அப்படியில்லை' என்று சொன்னார்கள். ஒரே இடத்தில் மட்டும் பூசை நடத்தும் பெண்மணி மட்டும் பூசை வேளையில் தனியாக ஆடையின்றிப் பூசை செய்து முடிப்பார்' என்று கூறினர்.

பகுதி –2

அடுத்த இதழில்

# ஆசை நாயகிகள் அனைவரையும் ஏற்றிச்செல்ல இப்படியொரு கார்!



ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு விதமான ஆசை; பணத்தின் மீது புரளும் சவுதி சேக்கிற்கோ இப்படியொரு தேவை. தனது ஆசைகள் நாயகிகள் அனைவரையும் அமெரிக்கா அழைத்துச் சென்றால் எத்தனை கார்களில் தான் அவர்களை ஏற்றித்திரிவது? எல்லோருக்குமே ஷேக்குடன் போவதுதான் விருப்பம். பிரச்சினையை சாதுர்யமாகத் தீர்க்க உருவாக்கிவிட்டார். இப்படியொரு காரை. ஆடம்பரமான இந்தக் காரில் ஏறி அமெரிக்காவைச் சுற்றிப் பார்க்கிறார்கள் அவரது ஆசை நாயகிகள். IC-3 புகைவண்டிபோல இது அமைந்திருக்கும் இதுவே தற்போதுள்ள உலகின் நீளமான தனி நபர் காராகும். 24 மீட்டர் நீளமுள்ள இக்கார் ஒரு லீட்டர் பெற்றோலில் ஒன்றரைக் கிலோ மீட்டர் மட்டுமே ஓடும். சுமார் 2 மில்லியன் அமெரிக்க டாலர்களில் உருவாக்கிய இக்காரை சவுதி ஷேக் எப்போதாவது மட்டுமே பயன்படுத்துகிறார். மற்றபடி சும்மாவே கிடக்கிறது. இதை நிறுத்த எங்குமே தரிப்பிடம் கிடையாது. திருப்புவதானால் நடுப்பகுதியில் முறித்தே திருப்ப வேண்டும். காரைவிட இத்தனை மனைவிகளையும் ஒற்றுமையாக ஏற்றிச் செல்வது சவுதி ஷேக்கின் திறமையா? அல்லது அவரிடம் இருக்கும் பணத்தின் மகிமையா? என்பதே முக்கிய கேள்வியாகும்.

## அனகார்கர்

அரசாங்க இரகசியம் அடங்கிய ஆவணங்கள் சுருட்டப்பட்டு கண்ணாடிப் புட்டியில் அடைத்து கடல்மூலமாக பிறநாடுகளுக்கு அனுப்பப்படுவது அக்கால வழக்கம் இங்கிலாந்துப் பேரரசியான இரண்டாம் எலிசபெத் (1533-1603) ஆட்சிக்காலத்தில் அந்நாட்டில் இவ்வாறு கடல்மூலமாக வந்துசேரும் கண்ணாடிப்புட்டிகளைத் திறப்பதற்காகவே அரச அதிகாரி ஒருவரை நியமித்திருந்தார்கள். "அனகார்கர்" என்பது இவரின் பெயர். இவரைத்தவிர வேறு எவரும் இந்தப் புட்டிகளைத் திறப்பது சட்டப்படி குற்றமாகக் கருதப்பட்டது.

சிறுகதை

# நானும் அவனும்

கி.செ.துரை

நானும் அவனும் வேறு சிலரும் ஓடிக்கொண்டிருந்தோம். சில இடங்களில் இறந்தவர்களையும் காயப்பட்டவர்களையும் கடந்து பாயவேண்டியுமிருந்தது.

1985 மே மாதம் 24–ம் திகதி வியாழக்கிழமை மறக்கமுடியாத அந்த நாளே என்னை ஐரோப்பாவரை அடித்துத் துரத்தியிருந்தது.

பாரதக் கதையில் அபிமன்யுவிற்குப் போட்ட சுற்றிவளைப்பைப் போல சுமார் 8000 இராணுவத்தினர் அந்தச் சின்னஞ்சிறிய கிராமத்தைச் சுற்றி வளைத்திருப்பது தெரியாது ஓடினோம். தப்பிவிடலாம் என்ற ஒரேயொரு நம்பிக்கையை வைத்துத்தான் வேகமாக ஓடிக்கொண்டிருந்தோம். அதிகாலை 4–மணிக்கே அந்த ஓட்டம் ஆரம்பமாகிவிட்டது.

"மச்சான் நேரம் என்ன....?"

'2–மணி' யாரென்றே தெரியாத நாங்கள் இருவரும் ஓடியபடியே மச்சான் உறவுவரை கைகொடுத்திருந்தோம்.

'எப்படியோ றோட்டைக் கடந்து அங்காலை போனம் எண்டால் தப்பியிடலாம்'

'படீர்! படீர்' துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகப் பறந்து வந்தன. கூட்டமாக வந்த ஆமிக்காரரை ஒற்றைக் கணத்தில் அவதானித்துக்கொண்டே மறுபக்கமாக ஓடுகிறோம்.

'அங்காலை நிக்கிறாங்களோ?'

'அந்தப் பக்கமாகத் தான் வாறாங்களப்பா வாங்க இந்தப் பக்கமாக ஓடுவம்!' ஆட்டுமந்தைகள் போல இன்னொரு பக்கமாக முறித்துக்கொண்டு ஓடுகிறோம். கால் அதிர்வுகளின்படி பார்த்தால் எம்மில் இருபதுபேர்வரை ஓடுவதாக கணக்குப் போடுகிறேன்.

வீதியோரமாக என்னோடு ஒன்றாகப் படித்த பாஸ்கரனின் சடலத்தைப் பார்க்கிறேன். தேகம் சில்லிட்டு ரத்தம் ஓடிக்காய்ந்திருந்தது. அவன் இறந்துபோய் பலமணி நேரங்களாகியிருக்கலாம். கவலைப்பட நேரமில்லை. கால்களை இரண்டெட்டுக் கூட்டிப் போடுகிறேன். அப்பொழுதுதான் இராணுவத்தின் அடுத்த அணிக்குப் பக்கமாக ஓடி வந்துவிட்டது தெரிகிறது. தேறைமீன் கூட்டம் போல மீண்டும் வதக்கெனத் திரும்புகிறோம்.

'அடோ தெமிழு!' சடசடவெனத் தோட்டாக்கள் பறந்துவர யாரோ சிலர் சரிகிறார்கள். வெடிச் சத்தம் M16 துப்பாக்கிகளுக்குரியதென எம்மில் ஒருவன் சொல்வது கேட்கிறது. நானும் அவனும் ஓடும் வேகத்திலேயே அதைக் கிரகித்துக் கொள்கிறோம். மரண வளையம் எம்மை பக்கமாக இறுக்கி வந்திருப்பது தெரிகிறது.

வழியில் ஒரேயொரு வீடு மட்டும் மிச்சம். புகுந்து கொண்டோம். வியர்வைக் கசம், எங்களது நெஞ்சிடிச் சத்தங்களே எங்களுக்குப் பெரிதாகக் கேட்குமளவிற்கு அமைதி.

நீண்டகாலமாக சவுதியில் வேலைபார்த்துத் திரும்பியிருப்பதால் அவனுக்கு அங்கு நடப்பது சரியாக விளங்கவில்லை. என்னைப் பார்த்துச் சத்தமின்றிச் சிரித்துக் கொள்கிறான். அது உண்மையான சிரிப்பா தெரியவில்லை. எட்டிப் பார்க்கிறேன் இராணுவத்தைக் காணவில்லை. சிறிதுதென்பாக இருந்தது.

"மச்சான் நீ கலியாணங்கட்டி எவ்வளவு காலம்?" என்னைப் பார்த்துக் கேட்டான்.

"மூண்டு மாதம்.... நீ"

"பத்து நாள்!" இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தோம்யார் முதலில் போகப் போகிறோமென்பது தெரியாத கணப் பொழுதுகள்.

பலத்த சத்தம்! தகரப்படலை கீழே விழுகிறது. இராணுவம் கிசுகிசுவென்று வீட்டிற்குள் நுழைகிறது. ஓடலாமா? அல்லது அப்படியே நிலத்தில் படுக்கலாமா? முடிவெடுக்கமுன் அச்சம்கொண்ட யாரோ ஒருவன் ஆட்காட்டி போல சத்தமிட்டுப் பாய்கிறான். வேறு வழியில்லை, 'கொய்'யென்று பறவைக் கூட்டம் போல நாமும் வெளியே பாய்கின்றோம்.

வீட்டைச்சுற்றி கிளுவந்தடி வேலி முட்கள் கிழிக்க மேலால் தாவுகிறோம். செல்லப்பிள்ளைத் தேகம் ஏற முடியவில்லை கீழே விழுகிறான். அவனில் மிதித்துப் பாய்வது மற்றவர்களுக்கு வசதி

யாக இருந்திருக்க வேண்டும். நானும் அவன் தோளில் மிதித்தே பாய்ந்ததாக ஞாபகம். இப்போது அவன் மட்டும் எம்முடனில்லை.

அவனுக்கு என்ன ஆகியிருக்கும்? வெடிச்சத்தம் வேறு சன்னமாகக் கேட்டது. நினைத்துப் பார்க்க நேரமில்லை. யாருடனும் சேராமல் தனியனாகப் பனை வடலிக்குள் பாய்கிறேன். அப்போதுதான் பனை மரத்தோடு பதுங்கியிருந்த ஆலடிச்செல்லனைப் பார்த்தேன்.

"டேய்! அந்தப் பக்கமா ஓடாதை!"

"ஆமி இந்தப் பக்கமா வாறான். நாங்கள் அந்தப் பக்கமாத்தானே ஓட வேணும்!"

"மடையா! ஆமிக்கு முன்பக்கமா ஓடினால் சூடுதான் வேண்ட வேணும். அவங்களுக்குப் பின் பக்கமாக பதுங்கிப் பதுங்கிப் போறதுதான் எங்களுக்குப் பாதுகாப்பு!" மூளையில் திடீரென்று மின்னல் வெட்டியது. செல்வனுடன் சேர்ந்து கொள்கிறேன்.

பதுங்கிப் பதுங்கிப்போய் மறுபடியும் இந்த வீட்டின் கிளுவந்தடிக் கதியால்களால் உள்ளே பார்க்கிறேன். இராணுவம் கதவைத் திறந்து வெளியே போவது தெரிகிறது. கிளுவத்தடி வேலியால் மீண்டும் உள்ளே பாய்கிறோம். காலில் ஏதோ தடக்குப்பட குனிந்து பார்த்தேன்.

சவுதி மாப்பிளைதான்; கதை முடிந்துவிட்டது. வாய்க்குள் துப்பாக்கியை வைத்துச் சுட்டிருக்கிறார்கள். பிடரி சிதறிப்போக பத்து விரல்களும் மண்ணை ஆழமாகக் கோலியபடியிருந்தன.

செல்லன் அவசரப்படுத்தினான். அடிமேல் அடி வைத்து இராணுவத்தைப் பின் தொடர்கிறேன். அன்றைய பிரேதக் குவியலுக்குள் எங்கள் பெயர்களும் பட்டியலிடப்படாமல் தப்பித்துக் கொள்கிறோம்.

★★ ★★

இராணுவம் போய்விட்டது.

பசி, களை இவற்றோடு வேறு ஏதோவொன்று என்னை வாட்டுகிறது. அவனுடைய சடலத்தைத் தேடிப் போகிறேன்.

அழுகைச் சத்தம். திருக்கல் வண்டியில் அவனை யாரோ தூக்கி ஏற்றுகிறார்கள். நானும் வண்டியைத் தள்ளியபடியே பின்னால் நடக்கிறேன்.

உயிருடன் வருவானென்றுதான் அவன் இளம் மனைவி காத்திருக்க வேண்டும். சத்தம் கேட்டதும் ஓடிவந்தாள். முகம் ஓடி விறைத்தது. விக்கல்போல ஒரு சத்தம்; மயங்கித்தான் விழுந்தாள்.

அவனை அடக்கம் செய்துவிட்டு, மீண்டும் வந்து அவளைப் பார்த்தேன்; நினைவு திரும்பவில்லை. நான் உயிருடனிருக்கும் செய்தியை என் மனைவிக்குச் சொல்வதற்காக வீடு நோக்கி வேகமாக நடக்கிறேன்.

★★ ★★



ஏதோவொரு உறவின் துடிப்பு. வெளிநாடு புறப்படும் போதும் அவளைப் போய்ப் பார்த்துவிட்டுத்தான் வந்தேன். இடிந்து விழுந்த கல்லுக் கட்டின் மீது அவனையே நினைத்தபடி இருந்தாள். அவனுடன் வாழ்ந்த பத்துநாள் வாழ்வு அவளைத் தாயாக்கியிருப்பதையும் அறிந்துகொண்டேன்.

இரண்டொரு கடிதங்கள் எழுதினேன். பின் இங்கு வந்தபின்னும் சில வருடங்களாக தொடர்பற்றுப் போய்விட்டது. எனது பழைய வீட்டு முகவரிக்கு அவள் போட்ட கடிதமொன்று எங்கெல்லாமோ சுழன்று இன்றுதான் கைக்குக் கிடைத்திருக்கிறது.

பிரித்துப் பார்த்தேன் முல்லைத்தீவில் இருப்பதாகத் தெரிந்தது. உள்ளே அவளுடைய மகனின் புகைப்படத்தோடு சிறு கடிதம் இருந்தது. சிறுவன் பன்னிரண்டு வயது மதிக்கக்கூடிய தோற்றத்திலிருந்தான் மெழுகுதிரி வெளிச்சத்தில் படித்துக் கொண்டிருந்தான்.

படத்தைத் திரும்பிப் பார்த்தேன். "மாமா கவலைப்படாதையுங்கோ! எமது மண் விடுதலை பெறும்! சின்னக் கைகளால் எழுதியிருந்தான். மறுபடியும் அவனுடைய முகத்தைக் கூர்ந்து பார்க்கிறேன். சந்தேகமில்லை வைத்துரித்து தகப்பனைப் போலவே இருந்தான்.

அன்று என்னோடு ஓடிய போது மண்ணை விறாண்டியபடி கிடந்த அவன் விரல்கள் மீண்டும் என் கண்களுக்குள் ஆடுகின்றன. மண் விடுதலைபெறும் என்ற வரிகளை அவன் விரல்கள் அழுத்தமாக எழுதியிருந்ததையும் கூர்ந்து கவனிக்கிறேன். ★★

# ஒலிகளை வெளிப்படுத்தும் மனிதனின் குரல் நாண்கள்

## பாடகர்கள் குரல் வளம் பெற செய்யவேண்டியவை

Larynx அல்லது Vocal Chords என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் குரல் நாண்கள் மனிதனின் பேசும் உறுப்பு ஆகும். இதை ஓரிசைக் கருவிக்கு ஒப்பிடலாம். உண்மையில் உலகில் உள்ள அனைத்து இசைக்கருவிகளிலும் சிறப்பு வாய்ந்தது மனிதனுக்கு இறைவனால் தரப்பட்ட நாண்கள் ஆகும்.

இப்பகுதி மூக்கையும் வாயையும் இணைக்கிறது. தொண்டையைப் பொதுவாக Larynx என்று கூறுவார்கள். இதன் அடிப்பாகம் முன்புறத்தில் உணவுக் குழல் வரை நீடித்து இருக்கிறது. நாம் உட்கொள்ளும் காற்றை ஒலிப்பெட்டியின் மூலமாக காற்றுக் குழாய்க்கும், நாம் உட்கொள்ளும் உணவை உணவுக்குழல் மூலமாக இரைப்பைக்கும், அனுப்புமாறு தொண்டையின் தசைகள் அமைந்துள்ளன. நாம் வெளிப்படுத்தும் காற்று ஒலிப்பெட்டியிலிருந்து தொண்டை, வாய், மூக்கு வழியாக வெளிப்படுகிறது.

ஒலிப்பெட்டி, அமைப்பில் ஒரு முக்கோணத்தை ஒத்திருக்கும். இந்த முக்கோணத்தின் முன் Adam's Apple என்ற பகுதி சிலருக்குக் கழுத்தில் நன்றாய் தெரியும். ஒலிப்பெட்டி 4 குருத்தெலும்புகளால் ஆனது. அதனுள் குரல் நாண்கள் (Vocal Chords) என்ற 2 மெல்லிய தோல்கள் உள்ளன. இவை பக்கவாட்டத்தில் தசைகளினால் இழுக்கப்பட்டுக் காற்றுக் குழாயின் துவாரத்தைக் கதவுகள் போல், மூடிக் கொண்டிருக்கின்றன. நாம் பேசாமல் காற்றை உட்கொள்ளும்போது அவை நன்றாக விலகுகின்றன; ஆனால் நாம் பேச முயற்சி செய்தவுடன் குரல்



## கலையும் மக்களும்

நாண்களில் தசைகள் நெகிழ்ந்து குரல்வளையின் துவாரம் சிதறிவிடும். அப்போது நுரையீரல்களிலிருந்து வெளிவரும் காற்று குரல் நாண்களைத் துடிக்கச் செய்கிறது. இதனால் ஒலி உண்டாகிறது. இவ்வொலி தொண்டை, வாய், மூக்கு முதலிய இடங்களில் உள்ள காற்றினால் பலப்படுத்தப்பட்டு வெளிக்காற்றில் பரவுகிறது. நுரையீரல்களிலிருந்து வரும் காற்றின் வலிமையைத் தக்கவாறு மாற்றி ஒலியின் முழக்கத்தை மாற்றிக் கொள்ளலாம்.

குரல் நாண்கள் பெண்களுக்கு இருப்பதைக் காட்டிலும் ஆண்களுக்குச் சற்று நீண்டும், தடித்தும் இருப்பதால் ஆண்கள் பாடும் ஆதார சுருதி பெண்களின் ஆதார சுருதியைவிட குறைவாக இருக்கிறது. மேலும் இளவயதில் குரல் நாண்கள் மெல்லியதாய் இருப்பதால் சிறுவர்களின் ஆதார சுருதி முதியவர்களின் ஆதார சுருதியைக் காட்டிலும் உயர்ந்தே இருக்கும். குரல் நன்றாக அமைந்தவர்கள் ஒவ்வொருவரும் 3 ஸ்தாயிகளில் நன்கு பாட முடியும்.

ஒருவருடைய குரல் நாண்களைப் பொறுத்து மட்டுமல்லாமல் அவருடைய வாயினுடைய அமைப்பையும், மூக்கினுடைய அமைப்பையும் பொறுத்து இருக்கும். குரல் நாண்களின் துடிப்பு இல்லாமல் நாம் ஒலி உண்டாக்க முடியும். நாம் கிசுகிசு என்று பேசும்போது உதடுகளின் அசைவைக் கொண்டு ஒலியை உண்டு பண்ணுகிறோம். ஒருவர் பாடும் போது குரல் நாண்களிலிருந்து கிளம்பிய ஒலியின் பரிவார சுருதிகள் (சுயம்பு சுரங்கள்) சில தொண்டை, வாய், மூக்கு முதலிய இடங்களில் உள்ள காற்றில் உடனியக்கத்தை உண்டாக்குகிறது.

வேறு எந்த இசைக்கருவியும் வெளிப்படுத்த முடியாத உயிரெழுத்து ஒலிகளை மனிதனின் குரல் வெளிப்படுத்துகிறது. எவ்வாறு உயிரெழுத்து ஒலிகளை மனிதன் உச்சரிக்கின்றான் என்றும், ஒருயிரெழுத்து ஒலிக்கும் மற்றோர்

உயிரெழுத்து ஒலிக்கும் என்ன வேறுபாடு என்றும், அளவுகளின் பண்பு என்ன என்றும் ஹெம்ஹோல்ஷ் என்ற ஜெர்மனி விஞ்ஞானி ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்துள்ளார்.

உயிரெழுத்து ஒலிகளைச் சொல்லும்போதும் அந்த ஒலிகளில் பரிவார சுருதிகள் அடங்கியுள்ளன. எடுத்துக்காட்டாக 'உ' என்ற ஓரொலியை எழுப்புவதாக வைத்துக் கொள்வோம். அந்த ஒலியில் உள்ள மூல சுருதியைத்தவிர 2 மடங்கு துடிப்பு எண்ணுள்ள இரண்டாவது பரிவார சுருதியும், 3 மடங்கு துடிப்பு எண்ணுள்ள இரண்டாவது பரிவார சுருதியும் இவ்வாறு பல பரிவார சுருதிகளுடன் 'உ' என்ற ஒலி வெளிவருகின்றது. அவ்வாறு ஏற்படும் ஒலியில் நம்முடைய வாயிலிருக்கும் காற்று எல்லா பரிவார சுருதிகளுக்கும் பலம் கொடுப்பதுமல்லாமல் சில பரிவார சுருதிகளுக்கு அதிகமான பலத்தைக் கொடுக்கின்றது. அதனால் தான் 'உ' என்று சொல்லும் போது ஒரு விதமாகவும், 'ஓ' என்று சொல்லும்போது மற்றொரு விதமாகவும், இம்மாதிரியாக வெவ்வேறு உயிரெழுத்துக்களைச் சொல்லும் போது அவற்றிற்குத் தகுந்தாற்போல வாயையும் நாம் வைத்துக் கொள்கிறோம். அவ்வாறு விதவிதமாக வாயை நாம் வைத்துக் கொள்ளும்போது வாயிலிருக்கும் காற்றின் இயற்கைச் சுருதி என்னவென்பதை ஹெம்ஹோல்ஷ் பல ஒலிச்சுவடுகளைக் கொண்டு ஒவவொன்றாகத் தட்டி வாய்க்கு நேராக வைத்து கண்டுபிடித்தார். தவிர எந்த உயிரெழுத்துக்களை உச்சரித்த போதிலும் வாயிலிருக்கும் காற்று அதிகபலப்படுத்தி அனுப்புகின்ற பரிவார சுருதியின் சுருதி மாறுவதில்லை என்றும் கண்டுபிடித்தார்.

**குரல் வளம்பெற செய்யவேண்டிய பயிற்சிகள்:**

1– நன்கு சுவாசப் பயிற்சி செய்யவேண்டும்.

2– ஈரல்கள் கொள்ளும் அளவு காற்றை நிரப்பி, அதை நிதானமாக வெளியனுப்பவேண்டும்.

3– காற்று வெளிவரும் நேரத்தை எவ்வளவு அதிகப்படுத்த முடியுமோ அவ்வளவுக்கு முயலவேண்டும்.

4– வாய், நாக்கு இவற்றை எளிதாக அசைப்பதற்கு அவற்றின் தசைகளைப் பழக்கவேண்டும்.

5– சிலர் பாடும்போது தொண்டையை விட்டு ஒலி கிளம்புவதற்குச் சிரமப்படுகின்றனர். வாயை மூடிக்கொண்டு அகார சாதகம் செய்வதால் இக்குறையை நிவர்த்திக்கலாம்.

6– பாடும்போது அடிவயிறு, மார்பு, தலை முதலிய இடங்களிலிருந்து ஒலிவருவதுபோல உணர்ந்து பாடவேண்டும்.

**-பைரவி**

---

## நூல் அறிமுகம்



'தெரியாத பக்கங்கள்'
சுதாராஜ்

'உணர்வின் நிழல்கள்'
யோகேஸ்வரி சிவப்பிரகாசம்



மல்லிகைப் பந்தல் வெளியீடாக இரண்டு சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. 'தெரியாத பக்கங்கள்' என்னும் தொகுப்பை எழுதியவர் சுதாராஜ். மல்லிகை, வீரகேசரி, சிரித்திரன், ஆனந்த விகடன் போன்றவற்றில் வெளிவந்த பதினொரு சிறுகதைகள் இதில் இடம்பெற்றுள்ளன. இச் சிறுகதைகள் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் போது மல்லிகை அச்சகத்திலிருந்து சிங்கள இராணுவத்தினால் தூக்கி வீசப்பட்டிருந்தன. மழையில் நனைந்த ஆக்கங்களை ஒன்றுதிரட்டி தொகுப்பாகக் கொண்டுவந்துள்ளார்கள்.

'உணர்வின் நிழல்கள்' தொகுப்பை எழுதியவர் ஈழத்தின் பெண் எழுத்தாளரான யோகேஸ்வரி சிவப்பிரகாசம். இச் சிறுகதைகளும் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் போது மல்லிகை அச்சகத்திலிருந்து சிங்கள இராணுவத்தினால் தூக்கிவீசப்பட்டிருந்தன.

மல்லிகைப்பந்தல் வெளியீடான இந்நூல்களை தற்போது வெளியிட்டோர்,

குமரன் பப்ளிஷர்ஸ், 79 முதல் தெரு,
குமரன் காலனி, வடபழனி, சென்னை 600 026.




## வெற்றிபெற்ற திரைப்படம் அப்படியே நாடகமாக மேடையில்!

பல மேடைகளில் நடிக்கப்பட்டு வெற்றிபெற்ற நாடகங்கள் திரைப்படங்களாவது வழமை. ஆரம்பகாலத்தில் தமிழ்த் திரைப்படங்களெல்லாம் நாடகங்களாக நடிக்கப்பட்ட பின்னரே திரைக்கு வந்தவை. ஆனால் திரைப்படமாக வெளிவந்து வெற்றி பெற்ற சினிமாக்களை அப்படியே நாடகமாகத் தயாரித்து நாடகத்திற்கும் திரைப்படத்திற்குமிடையே வேறுபாடு தோன்றாத வகையில் நிகழ்த்திக் காட்டுவதென்பது கடினமான காரியமாகும். இந்த வகையில் சினிமாவை நாடகமாக்கும் முயற்சியில் 'கிறேஸ்' என்னும் நாடகம் முக்கியமான கலை வடிவமென்று குறிப்பிடலாம். சினிமாவையும் நாடகத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர்கள் இப்படியோர் முடிவிற்கு வருவது தவிர்க்க முடியாததாகும்.


1950—களில் அமெரிக்காவிலுள்ள அமெச்சூர்க் கலைஞர்களால் சிக்காக்கோ பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இசை நடன முயற்சியே 'கிறேஸ்'. தற்போது உலகில் பல நாடுகளில் கிறேஸ் என்பது இசை ஆர்வமுள்ள இளைஞர்களால் பாடி, நடிக்கப்பட்டு வருகிறது. இத்தாலியில் இது 'பிறிலன்ரைன்' என்றும் மெக்சிக்கோவில் 'வாஸ்ஸனீன' எனவும் பெயரிட்டு அழைக்கப்படுகிறது. இதன் தாக்கமானது தற்போது அவுஸ்ரேலியா வரை பரவிக் காணப்படுகிறது.

இளைஞர்களின் இசை ஆர்வமும், மனதை ஆறவைக்கும் காதல் வாழ்வும் , பாடல்களும், றொக் அன்ட்றோல் நடனங்களும் நாடகம் முழுவதும் நிறைந்துள்ளன. புகழ்பெற்ற ஆங்கிலத் திரைப்படமான, 'சவுண்ட் ஒப் மியூசிக்' போல 'கிறேஸ்' திரைப்படமாக வெளிவந்து சக்கைபோடு போட்டதுதான். இதே திரைப்படத்தை ஒளிநாடாவில் பார்த்துவிட்டு நாடக அரங்கிற்குள் பிரவேசிக்




கிறோம். திரைப்படத்தைவிட நாடகம் தூக்கலாக இருக்குமா என்பதே எம் மனதில் கேள்வியாக இருந்தது. ஆனால் நாடகம் ஆரம்பித்த ஒரு சில நிமிடங்களிலேயே அந்தக் கேள்விக்கே இடமில்லாது போய்விட்டது. அவர்களின் திட்டமிட்ட, ஒருங்கிணைந்த பணி திரைப்படத்தைவிட நாடகத்தை ஒருபடி மேலுயர்த்திச் சென்றிருந்தது.

ரைடால் என்னும் பெயர் கொண்ட உயர் நிலைப் பள்ளி மாணவரிடையே கதை ஆரம்பிக்கிறது. நன்கு பாடக்கூடிய கூச்ச சுபாவமுள்ள கதாநாயகி படிப்படியாக மாற்றமடைந்து, நவ நாகரீகமான றொக் இசை நடன வல்லுனனான கதாநாயகனுடன் இணைந்து, இருவரும் தோழர்களுடன் வானம் பாடிகள் போல பாடித் திரிவதுதான் மூலக்கதை. இந்தத் தயாரிப்பில் கதை முக்கியமானதல்ல. மொத்தம் பதினொரு காட்சிகளிலும் வரும் 21 அற்புதமான பாடல்களும், அதற்கான இசையமைப்பும், பல்வேறு வர்ண உடைகளில் டாலடிக்கும் நடனங்களும், கண்கவர் காட்சியமைப்புகளும், உயர்ந்த தொழில் நுட்பத்துடன் கூடிய ஒலி, ஒளிக் கலவையும்தான் சிலாகித்துப் பேசப்பட வேண்டியவை.




தமிழில் இதுபோன்ற பிரமாண்டமான நாடகங்களை தயாரித்தவர்களில் ஒருவர் தமிழகத்தைச் சேர்ந்த ஆர். எஸ்.மனோகர் அது போல தெலுங்கில் நம்ப முடியாத அரங்க அமைப்புக்கள், தந்திரக்காட்சிகள் போன்றவற்றை மேடையில் ஏற்றிப் பிரமிக்க வைக்கும் முயற்சிகள் நடைபெறுவதாக அறிகிறோம். இவ்விதமாக நமக்குக் கிடைத்துள்ள தகவல் பின்னணியில், 'கிறேஸ்' நாடகத்தைப் பார்த்தபோது அதன் அரங்கம் ஒலி ஒளி போன்றவை பற்றி நிறையவே சிந்திக்க வேண்டியிருந்தது. திரைப்படத்தைப் போலவே நாடகமும் அமையவேண்டும் என்பதால் விஷேடமான அரங்குகளை அமைத்திருந்தார்கள். பெரிய பெரிய அரங்குகள் பல மேடையின் மேற்புறத்திலிருந்தும், இரண்டுகரைகளிலிருந்தும், பின்புறமாகவும் நகர்ந்து வருகின்றன. காட்சி முடிந்ததும் தோன்றும் மெல்லிய இருளில் வந்த சுவடு தெரியாமலே மறைந்தும்விடுகின்றன.





ஒருகட்டத்தில் மேடையில் *1946–ம்* ஆண்டுக்குரிய பழைய கார் ஒன்று ஓடிவருகிறது. துருப்பிடித்து, பாசி படர்ந்து, பச்சை நிறமாகக் காட்சியளிக்கிறது. அப்போதுதான் கதாநாயகியின் சம்மதம் கிடைக்கிறது அக்கணமே அந்தக் கார் மேலே கிளம்பி அந்தரத்தில் சுழல்கிறது. பத்தே பத்து வினாடிகள்தான் பச்சைக்கார் இப்போது சிவப்பு நிறத்தில் புத்தம் புதிய காராகச் சுழன்று வருகிறது. புகை மண்டலத்தினூடாக ஏராளமான நடனகாரர் தோன்றுகிறார்கள். இதற்கென புதுவிதமான ஒளிக்கற்றைகளை வீசி காரைத் துலக்கிக் காட்டுகிறார்கள். உச்சக்கட்டமாக மேலும் ஆறு கார்கள் மேடையில் தெரிகின்றன. மேலும் கரும் பச்சை நிறமான திரையொன்று பின்னால் விழுந்திருக்கிறது. அதன் முன்புறம் சாதாரண காட்சிகள் நடைபெற திடீரென மேற்புறத்திலிருந்து விஷேட விளக்குகள் திரைச்சீலையை ஊடறுத்து உள்ளே பாய்கின்றன. சீலையின்


பின்புறமாக கோபுர வடிவில் குவிந்திருந்த நடிகர்கள் இப்போது துல்லியமாகத் தெரிகிறார்கள். திடீரென வேகமான இசையும்




நடனமும் ஆரம்பிக்கிறது. இப்படியாக மூன்று நிமிடங்களுக்கு ஒரு தடவை ஏதோ ஒரு காரியத்திற்காக வியப்படைந்தபடியே இருக்க இரண்டு மணி பதினைந்து நிமிடங்கள் கரைந்தே போய்விடுகின்றன.

இசை வழங்க முன்வரிசையில் ஜிம் ஜாக்கப், வாரன்கேசி தலைமையிலான இசைக்குழுவினர் அரை வட்டமாக அமர்ந்திருக்கிறார்கள். ஆனால் இவர்களைப் பார்வையாளர் பகுதியிலிருந்து பார்த்தால் முடியாது. இசைக்கேற்ப நடிகர்கள் அனைவரும் நேரடியாகவே பாடல்களைப் பாடியபடி நடனமும் ஆடுகிறார்கள். ஒலியமைப்பு துல்லியமாக வந்து காதுகளில் நிறைகிறது. நாடகம் முடிந்தது யார் காட்சி அமைப்பிற்குப் பொறுப்பாக இருக்கிறார்கள் என்பதை அறிய உள்ளே சென்றோம். அங்கேதான் தமிழரிடையே முன்னரே அறிமுகமான பியா ஸ்ரீன்பேக் அமர்ந்திருந்தார். இவர் ஓர் டேனிஸ்காரர். ஏற்கனவே பல தடவைகள் தமிழக இசைக் கலைஞர்கள் டென்மார்க் வந்தபோது அவர்களுக்கு ஒலி, ஒளி, அமைப்பாளராகக் கடமையாற்றிய அனுபவமுடையவர். இவருடைய திறமையை விபரிக்க ஓர் அனுபவத்தை இங்கே கோடிட்டுக் காட்ட வேண்டும். ஒருமுறை T.M. சௌந்தர்ராஜன் இம் மண்டபத்தில் கச்சேரி செய்தபோது இவரே ஒலியமைப்பாளராக இருந்தார். முன்னரே ஒத்திகை பார்க்கவில்லை. முதலாவது பாடல் முடிந்ததும் ஒலிவாங்கியில் திருப்தியிழந்த ரி.எம்.எஸ் மேடையில் நின்றபடியே "என்னய்யா சுண்டக்கா மைக்! நான் எத்தனையோ லட்ச ரூபா மைக்கிலே எல்லாம் பாடியிருக்கேன் இது என்னா மைக்? நீங்க ஒண்ணுமே பண்ணவேண்டாம் நானே என் குரலை ஏத்தி இறக்கிறேன்!" என்றார். இவருக்கோ தமிழ் தெரியாது ஆனால் ரி.எம்.எஸ் தன்னைத்தான் திட்டுகிறார் என்பது மட்டும் அவருக்கு தெரிந்தது. "இவர் என்ன கூறுகிறார்?"








என்று கேட்டார், மொழி பெயர்த்துக் கூறியபோது சிரித்துக் கொண்டார். "இப்பொழுதுதான் ஒரு பாடலைக் கேட்டிருக்கிறேன். இரண்டாவது பாடலைப் பாடும்படி கூறுங்கள். அதன் பிறகு யோசிப்போம்" என்றார் இரண்டொரு பாடல்களின் பின் ரி.எம்.எஸ் மீண்டும் மகிழ்ச்சியாகப் பேசத் தொடங்கினார். "நான் பாரீஸ், லண்டன், கனடா, சிங்கப்பூர் போன்ற இடங்களில் எல்லாம் பாடியிருக்கிறேன். ஆனால் இதுபோல தெளிவான ஒலியமைப்பை யாருமே எனக்குச் செய்துதரவில்லை" என்றார். கங்கைஅமரன், கே.ஜே.ஜேசுதாஸ் போன்றவர்களும் இவருடைய திறமையைப் பாராட்டியிருக்கிறார்கள். திரைப்படத்தைப் போலவே நாடகத்தையும் மாற்றிவிடும் திறமையும் அவரில் மறைந்திருந்ததை முதல் தடவையாக அறிந்து கொண்டு, வெளியேறுகிறோம். கிரேஸ் தரமான படைப்பு என்பதில் சந்தேகமில்லை.

# எழுத்தாளர்களிடம் சில பொறுப்புக்கள்

பாலம் சஞ்சிகையில் பல தரப்பட்ட விடயங்களையும் வெளியிட இருப்பதால் எழுத்தாளர்களிடம் இருந்து ஆக்கங்களை பாலம் சஞ்சிகை எதிர்பார்த்து நிற்கின்றது. கலை, இலக்கியம், விளையாட்டு போன்ற விடயங்களில் ஆர்வம், அனுபவம் உள்ளவர்கள் பாலம் சஞ்சிகையில் பிரசுரிக்கக் கூடியவாறான கட்டுரைகளை எழுதி எமக்கு அனுப்பிவைக்கவும்.

கட்டுரைகள், சிறுகதைகள் கணணியில் எழுதப்பட்டதாயின் 12 Pt-இல் 2,3 பக்கங்கள் [A4] – கையால் எழுதப்பட்டவையாயின் 3, 4 பக்கங்கள் [A4].

சிறிய கட்டுரைகள் ஒரு பக்கத்தில் கணணிப்பதிப்பு அல்லது இரண்டு பக்கங்கள் கையால் எழுதப்பட்டவை. இவை தவிர பாலம் சஞ்சிகையில் பிரசுரிக்கக் கூடியதென நீங்கள் கருதும் விடயங்களையும் எமக்கு அனுப்பி வைக்கவும்.

ஓவியங்கள் வரையக்கூடியவர்களும் எம்முடன் தொடர்பு கொண்டு உங்களது ஆக்கங்களை வெளிக்கொணரவும்.

"கேட்டோம் சொன்னார்கள்" என்னும் பகுதியில் முக்கிய நபர்களை சந்தித்து "பாலம்" வாசகர்களுக்கு அவர்களை அறிமுகப்படுத்தி வருகிறோம். எனவே நீங்களும் கலை, அரசியல், இலக்கிய, விளையாட்டு, வைத்திய, பொறியியல் துறை சார்ந்தவர்களாக இருந்தால் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

PALAM PUBLICATIONS
SONDER PARKEN 10,ST: TV
7430 IKAST
DENMARK
Fax: 45 97 25 22 96

முழுப்பெயர்:–...........................................

முகவரி: –...........................................

...........................................

தொலைபேசி: –...........................................

சார்ந்த துறை:– ...........................................

குறிப்பு: –




# காதலுக்கு மரியாதையும் சொர்ணமுகியும்!

அதிகமாக தமிழ்ப் புத்தாண்டில் வெளியான எல்லாத் திரைப்படங்களுமே ஐரோப்பிய நாடுகளுக்கு வந்துவிட்டன. எனினும் காதலுக்கு மரியாதை எட்டிப்பிடித்த இலக்கை புத்தாண்டுத் திரைப்படங்கள் எதுவும் பிடிக்கவில்லை. காதலுக்கு மரியாதை புலம் பெயர்ந்த தமிழரிடையே குறிப்பிடத்தக்களவு ஓடியமைக்கு அது கூட்டுக் குடும்பமே ஒருவருக்குப் பாது காப்பு என்ற கருத்தை வலியுறுத்துவதாக இருக்கலாம். எதிர்காலம் பற்றிய




கேள்விக் குறியும், அச்சமும், பெருகும் விவாகரத்துக்களும் நிறைந்துள்ள புலம்பெயர் சூழலுக்கு கூட்டுக்குடும்பமே பாதுகாப்பானது என்ற மனோ நிலைக்கு அத் திரைப்படம் ஒத்தடம் கொடுப்பதால் அது பலருக்கு ஆறுதலளித்திருக்கலாம். குடும்பப் பாதுகாப்

புத்தாண்டுத் திரைப்படங்கள் எல்லாமே சரிந்துவிட்டன. இருப்பினும் சொர்ணமுகி என்ற திரைப்படம் மட்டும் அமைதியாகவும், நிதானமாகவும் ஓடிக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். தேவயானி, பார்த்திபன், பிரகாஷ் மூவருக்கிடையில் நடைபெறும் முக்கோணக் காதல்கதை. சொர்ணமுகி பரதக்கலையில் நாடறிந்த நாட்டியத் தாரகை. ஆனால் அவருடைய தாய் அரசியல்வாதியான மணிவண்ணனுக்கு சின்னவீடு. மேலும் சொர்ணமுகியின் பிறப்பின் கதையும் இருளானதுதான். இவையெல்லாம் தெரிந்தும் அவளை உயிருக்குயிராகக் காதலிக்கிறார் ஜெயகணேசின் ஒரேயொரு வாரிசான பார்த்திபன். திருமணத்திற்கு வழமைபோலத் தடை. தாலி வாங்கப்

இருப்பினும் இந்தத் திரைப் படத்தில் குறிப்பிட்டுக் கூறக்கூடியது பார்த்திபன், பிரகாஷ், இவருடைய நடிப்புக்களுமே. நல்லவனாக இருந்தும் தீயவனாக நடித்து தன் காதலியே தன்னை வெறுத்து, பிரகாஷை



விரும்பும்படி செய்து, மறுபடியும் சிறைக்குப் போகிறார் பார்த்திபன். தன் தகப்பன் இறந்தசெய்தி கிடைத்தும் அதைக் கவனியாது காதலியையே பின் தொடரும் பாத்திரமாக நடிக்கிறார். புதிய பார்வைக்குப் பின் பார்த்திபனை இத்திரைப்படத்தில் காணமுடிகிறது. இருந்தாலும் சொர்ணமுகி என்ற பெயரைக் கேட்டதும் தமிழக அரசின் முன்னாள் ஆஸ்த்தான நாட்டியத் தாரகை சுவர்ணமுகியின் பெயரும் நினைவுக்கு வந்துவிடுகிறது. அவருடைய நடனங்களைப் பார்த்தவர்கள் அந்தச் சுவர்ணமுகியுடன் இந்தச் சொர்ணமுகியை ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்கமுடியாது. பரதத்தின் அரிச்சு


புக்காக கொலைக்கும் அஞ்சாத மனோநிலையுடன் பிஸ்தாக்களுடன் அலையும் கதாநாயகன் கதாநாயகி குடும்பங்களை நல்லவர்களாகச் சித்தரிக்கும் எந்தப்படமும் நன்றாகத்தான் ஓடியிருக்கிறது.

இதுபோல இப்போது தமிழகத்தில் எந்தத் திரைப்படம் நன்றாக ஓடுகிறது என்பதை விசாரித்துப் பார்த்தோம். தமிழ் நாடு சென்று திரையரங்கச் சூழ்நிலைகளை நேரடியாகப் பார்த்து வந்த நண்பர்ள் தந்த தகவல்களின்படி போன பார்த்திபன் வந்து சேர்வதற்குள் சொர்ணமுகியும் தாயும் ஊரைவிட்டே கிளம்ப வேண்டிய நிலை. அதன்பின் பார்த்திபனைக் காணவில்லை. பின் பிரகாஷ் சொர்ணமுகியை விரும்பி திருமண நாளும் குறிப்பிடப்பட நாம் காத்திருந்தபடி பார்த்திபனும் சிறையிலிருந்து திரும்புகிறார். இந்தக் கதையை எத்தனை தடவைகள்தான் திருப்பித்திருப்பி எடுத்துப் பார்க்கப்போகிறார்கள் என்று சலித்துப் போய்விடுகிறது மனசு. வடியே காணமுடியாத தேவயானியின் நடனங்களைக்காட்டி கதைவிட எண்ணியிருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது காதைத் தடவிப் பார்க்காமல் இருக்கமுடியவில்லை.


*1998–ல் நூறு நாட்கள் ஓடிய திரைப் படங்கள்*

ஆஹா, பொற்காலம், ஜானகிராமன்
காதலுக்கு மரியாதை, மறுமலர்ச்சி
காதலேநிம்மதி

# ஏழு நிமிடங்களில் 113 பணிஸ்களை விழுங்கி முடிக்கிறார்!



57 வயதுடைய பீற்றர் டவுட்ஸ் வேல்ஸ் தற்போது இங்கிலாந்திலுள்ள சிறிய நகரமான ஏள்ஸ் பாற்றனில் வாழ்ந்து வருகிறார். சாதாரண தொழிற்சாலை ஊழியரான இவர் உணவுப் பொருட்களை விழுங்குவதிலோ உலக சாதனையாளராகத் திகழ்கிறார். இவருக்குப் படைக்கப்பட்டிருப்பது குடலா? அல்லது கழிவு நீர்க்குழியா? என்று ஆச்சரியமடைகிறார்கள் இவருடைய நண்பர்கள். ஏழு நிமிடங்களில் 113 பணிஸ்களை விழுங்கி விடுவார். 30 லீட்டர் பியரை மூன்றே மணி நேரத்தில் குடித்து முடித்துவிடுவார். அத்தோடு நாலரை நிமிடங்களில் 96 சொசேஜ்களைச் சாப்பிட்டும் காட்டியுள்ளார். உணவுப் பொருட்களை விழுங்குவதில் உலக சாதனையாளரான இவர் தான் விழுங்கிய உணவையோ அல்லது குடித்த பியரையோ ஒருபோதும் சத்தியெடுத்ததில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



பியர் குடிப்பதற்கான மாஸ்டர் விருதுப் போட்டியொன்று வருடாவருடம் பிரித்தானியாவில் நடைபெறுகிறது. 85 செ.மீ உயரமான கிளாசில் இரண்டு லீட்டர் பியர் நிறைக்கப்பட்டிருக்கும். யார் அதை குறைந்த நேரத்தில் குடித்து முடிப்பதென்பதுதான் போட்டி. இதுவரை எட்டப்பட்டிருந்த சாதனை 35 செக்கன்களாகும். ஆனால் இப்போட்டியில் பங்குபற்றிய பீட்டர் அதை வெறும் 12 செக்கன்களில் வாய்க்குள் வார்த்து முடித்து, சாதனை படைத்தார். பீட்டர் மட்டுமல்ல அவரது மனைவியும், மகனும்கூட உணவுப் பொருட்களை வேகமாக விழுங்குவதில் வல்லவர்கள். வீட்டில் உணவுப் பொருட்களை வேகமாக விழுங்கிப் பயிற்சியெடுப்பது இவர்களது பொழுதுபோக்கு. இவரை தற்போது பல வெளிநாடுகள் இச்சாதனையை நிறைவேற்றக்காட்டும்படி அழைப்புவிடுத்துள்ளன. முதற்கட்டமாக டோக்கியோ பயணமாகிறார். குறைந்த சம்பளத்தில் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்வதைவிட உணவுப் பொருட்களை விழுங்கிக் காட்டி அதிக பணம் உழைக்கலாம் என்பது இவருடைய வருங்காலத் திட்டமாம்.



# ரி.எம்.எஸ். உடன் ஒரு சில நிமிடங்கள்

## தலைவர் பிரபாகரன் என்னைப் பாராட்டினார்!

ரி.எம். சௌந்தரராஜனுடைய பாடல்களுக்கு பத்திரிகைகள் ஒரு காலத்தில் எவ்வளவு பிரபலம் கொடுத்தனவோ அவ்வளவுக்கு அவர் வித்தியாசமானவர். பொறுமையைக் கடைப்பிடிப்பது குறைவு என்பன போன்ற கருத்துக்களையும் அதே பத்திரிகைகளே வளர்த்தும் வைத்திருக்கின்றன. ஐரோப்பா வந்தபோது அவருடன் சிலநாட்கள் நேரடியாகப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. பத்திரிகைகளால் நாம் அறிந்த ரி.எம். எஸ் ஸிற்கும் அடி தலையான வேறுபாடுகள் தெரிந்தன.

ரி.எம். எஸ் மிகவும் எளிமையாகப் பழகினார். ஆனால் பக்க வாத்தியங்களை இசைக்கும்போது சரியான 'நெட்வேர்க்' இருக்க வேண்டும் என்பதில் இறுக்கமாக இருப்பது தனது இயல்பென்றார். எந்தெந்த இடங்களில் எந்தெந்த வாத்தியங்கள் வரவேண்டுமோ அந்தந்த இடங்களில் அவை அப்படியே வரவேண்டும். அதை வரவழைக்க முடியாதவர்கள் ஏன் வாத்தியங்களுடன் மேடைக்கு வரவேண்டும்? ஆகவேதான் தவறு நடந்தால் மேடையிலேயே சுட்டிக்காட்டுகிறேன். அப்படிச் செய்தால் தம்மை விரைவாகத் திருத்திக் கொள்ள முடியுமல்லவா? மேலும் ஒரு ஆள் மூன்று கீபோர்ட்டுக்களை அடுக்கி வைத்துக்கொண்டு நிற்கிறார்க இது தவறு. வாத்தியங்களைப்பிரித்து அந்தந்த வாத்தியங்களை அந்தந்த துறையில் தேர்ச்சி பெற்றோர் வாசிப்பதுதான் சிறந்தது. கீபோர்ட்காரரே புல்லாங்குழலின் இனியஇசையையும் வாசித்தால் நல்லாவா இருக்கும்? இதைச் சொன்னால் கோபம் வந்துவிடுகிறது.



நான் நாலு தலைமுறைக் கதாநாயகர்களுக்குப் பாடியிருக்கிறேன். என்னுடைய பாடல்களை எம்.ஜி.ஆர் பாடல், சிவாஜி பாடல் என்றுதான் பேசுகிறார்கள் அது தவறு அவை என்னுடைய குரலே. ஞானஒளி படத்தில் 'தேவனே' என்ற பாடலுக்கு வசனம் பேசியதே நான்தான். அதை சிவாஜியும் செய்து பார்த்தார் 2நல்லா வரலே என்று கூறினாலும் நடிகர்திலகத்தின் நடிப்பின் உயர்வையோ எம்.ஜி. ஆரையோ அவர் எந்த இடத்திலும் விட்டே கொடுக்கவில்லை. துரியோதனன், இராவணன், பாண்டவர், இராமர் என எல்லோருக்குமே ஒரு



காலம் என்பதுபோல இளையராஜாவிற்கும் ஒரு காலம் அதுவரை அவரை யாரும் ஒன்றுமே செய்துவிட முடியாது. அவருடைய காலம் முடிந்துவிட்டால் பின் அவராலும் ஒன்றும் செய்துவிட முடியதாது. எல்லாமே அவரவருக்குக் கிடைத்த காலத்திற்குள்தான் என்றார். கடலைப் பருப்பை வறுத்து பொடிபண்ணி சாம்பார் பொடி செய்து வந்தவர்களுக்கெல்லாம் 'ரெடிமேட்' சாம்பார் சமைத்துக் காட்டினார். அவை வித்தியாசமாக இருந்தது.

தமிழீழத் தேசியத் தலைவர் முன்பு தமிழகத்தில் இருந்தபோது ஒருமுறை தன்னைப் பாராட்டியதாகவும், 'அச்சம் என்பது மடமையடா!' என்பது போன்ற வீர உணர்ச்சிப் பாடல்களைத் தொடர்ந்து பாடும்படி தன்னிடம் கூறியதாகச் சொன்னார். அவரின் அன்பு வேண்டுதலைநான் என்றுமே மறப்பதில்லை என்றபடியே காரில் ஏறினார். போகும்போது வீதியில் சென்றுகொண்டிருந்த ஒரு தமிழ் இளைஞரைக் கண்டுவிட்டார். உடனே இவரும் இந்த நகரத்திலா இருக்கிறார் என்று கேட்டார். திரும்பிப் பார்த்த போது, தனது கச்சேரியை விசிலடித்துக் குழப்பும் முகங்களை எந்தக் கலைஞனும் இலகுவில் மறந்துவிடுவதில்லை என்ற உண்மை தெரிந்தது.


ஓவியா
காத்திருந்த காதல்...
COMING SOON ON PYRAMID
MUSIC BY A.R.RAHMAN
பழைய புதிய தமிழ் திரைப்படங்கள்
(வாடகை /விற்பனை) தென்னிந்திய
தொலைக்காட்சி (தொடர்) நாடகங்கள்
ஐங்கரன், பிரமிட், ரமி CDக்கள்
ஓடியோக்கள் இலங்கை இந்திய தமிழ்
சஞ்சிகைகள் விற்னையாகின்றன.
127A, EALING ROAD
ALPERTON, WEMBLEY HA0 4BP, LONDON.
(Sakoni Resturant மேல் மாடியில்)
Tel: 0181 - 903 4762, Mobile: 0958 762 645
வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்.
தபால் மூலமாகவும் உங்கள் தேவைகளை நிறைவு செய்யலாம்.

# RAMIY RECORDS





RAMIY

RECORDS

புதிய , பழைய பாடல்களை தரமான ஒலிப் பதிவில்
உங்களிற்கு எப்போதும் வழங்குகிறோம்.